www.tamilarangam.net

# சக்தி

கலை இலக்கிய சமூக காலாண்டிதழ்

2: 4 ஏப்ரல்



RAYA
87 RUE DE COLOMBE
92600 ASNIERES S
SEINE : FRA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் அறிமுகம்

## மறையாத மறுபாதி

பெண்கள் மனதில் முடங்கிக் கிடக்கும் திறமைகளை , உணர்ச்சிகளை தூசி தட்டி கவிதை வடிவில் வெளி உலகிற்கு இனங்காட்ட முன்வந்த பிரசுரிப்பாளருக்கும் உதவியாக இருந்தவர்களுக்கும் முதற்கண் நன்றி கூற வேண்டும்.

இப் புத்தகத்தைப் படித்தவர்கள் சிலர் இக் கவிதைகள் இலக்கண இலக்கிய வரையறைக்கு உட்பட்டவைதானா என்றும் பெண்கள் பிரச்சனைகளையும் அதன் தீர்வுகளையும் கோடிட்டுக் காட்டுவதுதான் இலக்கியமா என்றும் பல வினாக்களை எழுப்புகிறார்கள்.
புராண காலத்திலிருந்தே எந்த இலக்கியத்தை எடுத்துக் கொண்டாலும் அவை பெண் சம்பந்தமான பிரச்சனைகளை உள்ளடக்கியவையாக இருக்கின்றது. பெண் இல்லாவிட்டால் இலக்கியமும் இல்லை, இலக்கணமும் இல்லை ஏன் இந்த உலகமும் இல்லை. பிரச்சனைகளை விடுத்து நிலவையும் மலரையும் வர்ணித்து இன்னும் எவ்வளவு காலம் கவிதை புனைவது நேரத்தை வீணாக்குவது. பாமரனும் புதுக் கவிதை பாடலாம். கவிதை என்றால் அது வெண்பா வடிவாகவோ வசன நடையாகவோ எப்படியும் இருக்கலாம். ஆனால் அதில் ஏதாவது செய்தியிருக்க வேண்டும். படிப்பவரைக் கவர வேண்டும். எதுகையும் மோனையும் உறவாட வேண்டு என்றால் மறையாத மறுபாதி சுமந்துவரும் கவிதைகளும் கவிதைகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவதான்.
இங்கே சீதனம், சமூகத்தில் ஆண்,பெண் வளர்ப்பு முறையில் பேதம், ஆணாதிக்கம், பெண்ணடிமைத்தனம், ஈழப்போரினால் ஏற்பட்ட இன்னல்கள் பிரச்சனைகளின் வெளிப்பாடுகளைக் கவிதைகள் கொண்டிருக்கின்றன.
ஆண்பெண் குழந்தை வளர்ப்பு முறையில் உள்ள அநியாயமான வித்தியாசங்களை தங்கள் கவிதைகளில் அழுத்தமாக சாடியுள்ளார்கள்.
"தோழிகளுடன் கூடியிருக்கவும், வெளிக்கிணற்றில் அள்ளிக் குளிக்கவும், மணற் குவியலில் விளையாடவும் தம்பியுடன் சண்டை பிடிக்க விலக்கப்பட்டுள்ளதாம் "என மல்லிகாவும்
"தந்தைவழி தட்டிக் கொடுத்தார்கள் இவன் வளர்ச்சிக்காக
எல்லாமே விசேசமானது
அக்கறைகள் அதிகமானது
தேவைகள் சித்தி பெற்றன" என்று ஓர் ஆண் குழந்தையின் ஜனனத்தின் விசேசத்தை அழகாக விளக்குகிறார் கௌசல்யா!
மேலும்
கார் பங்களா கறுத்தக் கோட்டும்
அவரிடமிருக்க அம்மாவுக்கில்லை அன்று
அண்ணன் படிக்க அம்மாவோ அடுக்களைக்குதவ "
பாசத் தியாகம் பல செய்து தங்கள் வாழ்வை நாறுமாக்கிய தங்கைகள் அக்காக்கள் ஏராளம் நம் நாட்டில் . " சின்னவளாய்" கவிதை இத்தங்கைகளுக்கு ஓர் விழிப்புணர்ச்சியை நிச்சயம் ஏற்படுத்தும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"செவ்வாயில் வாழச் சென்றால்
சூரியனையும் சந்திரனையும்

சீதனமாய் கேட்பீரோ" எனமிருந்த சாட்டையடிகள் நிருபாவின் கவிதை வரிகள்.
"முடாமாக்கும் முயற்சியில் நான் பலமாகிக் கொண்டிருப்பதை
செவிட்டுக் காதுகளுக்கு உரத்துக் கூறுகிறேன் " இவரின் கவிதையில் மட்டுல்ல பாதிப்படைந்த எல்லா பெண்களுமே நம் சமூகத்தில் இன்று பலமாகிக் கொண்டிருக்கிறார்கள். செவிட்டுக் காதுகளுக்கு எட்டினால் சரி.

கல்யாணியின் சாம்பற் பூச்சிகள் , முண்டங்களே போன்ற கவிதைகள் சிந்திக்க வைப்பவை.
"கோடையின் வருகைக்கு கோலமிடும் பூக்கள்
நீண்ட இரவைத் துரத்தி நின்று வேடிக்கை பார்க்கும் சூரியன்
வெள்ளிகளைத் துணைக்கழைத்து வீதி உலா வரும் வெண்ணிலவு.
என்று பாமினியும்
"வானத் தலையணை கிழித்து
பஞ்சுத்துகளென பனி பறக்கும்
பூமி வெண்பட்டால் போர்த்துறங்கும்"
என மைத்ரேயியும் பெண்கள் பிரச்சனைகள் மட்டுமல்ல இயற்கை ரசனை, வர்ணனைகளிலும் நாம் குறைந்தவர்கள் அல்ல என்று நிரூபிக்கிறார்கள்.
போலி எழுதுகோல்கள், அநுதாபம் போன்ற கவிதைகளிலும் அவசியமான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார் பாமினி.
" ஊருக்கோர் கொள்கை, தனக்கோர் தனிக்கொள்கை
சீர்திருத்தம் பற்றி சீறி எழுதுவதில் மட்டுமே
சிரத்தையுள்ள சிந்தனையாளர்கள் "
சீர்திருத்தம் என்ற போர்வையில் சீர்கேடு செய்யும் பொய் முகங்களின் முகத்திரையை கிழித்தெறிகிறார் பாமினி தன் கவிதை வரிகளில்.

நம் தாய் நாட்டின் இன்றைய நிலையையும் நம் இனத்தவர்கள் படும் துயரங்களையும் கவிதைகளாக்கி நம்மை உருக வைக்கிறார்கள் ஜெயந்தி உமையாள் பிரியதர்சினி போன்றோர்.
"அஸ்தமித்த சூரியன் அரங்கிற்கு வருமுன்
குண்டு கொட்டிச் செல்லும் கொலை விமானங்கள் "
"நாளைய பொழுதில் விடியலின்றியே நீயும் இறக்கலாம்
சப்தமின்றி புதியவனால் " உயிருள்ள வரிகள்.
சீதனக் கொடுமையால் சீர் குலையும் பெண்கள் ஏராளம். அவர்தம் நிலை உணர்த்த
'சிங்காரித்தே
எம் அழகு நிதம் குறைந்தது
வருட விளிம்புகள்
நம் வயதைத் தாராளமாக்கியது" என்று பி.ஆர் ரஞ்சனியும்
'எதற்காக சீதனம்
நற்குணத்துடன் நல்லபடிப்பும்
பொற்குடமாகியே சீதனமாகிவிடும் " என புஷ்பா கிறிஸ்டியும் சீதனத்தை நிந்திக்கிறார்கள் .
**மறையாத மறுபாதி** சுமந்து வரும் இக்கவிதைகள் படிப்பவரை சிந்திக்க வைப்பதோடல்லாமல் சம்பந்தப்பட்டவர்களுக்கு விழிப்புணர்ச்சியையும் நிச்சயம் ஏற்படுத்துவதோடல்லாமல் நம் பெண்களிடம் இத்தனை எழுத்தாற்றலும், திறமையும்

இருக்கிறதே என்று ஆச்சரியப் படவும் வைக்கிறது.

**கருணா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணியக்க முன்னோடிகளில் ஒருவரான

# கிளாரா செற்கின்

" சர்வதேசப் பெண்கள் இயக்கம், சர்வதேசப் பெண்கள் தினம் இவற்றோடு பின்னிப் பிணைந்துள்ள ஒரு பெயர் கிளாரா செற்கின். சர்வதேசப் பெண்கள் இயக்கத்தையும் பெண்கள் தினத்தையும் பற்றித் தெரிந்து கொள்வதற்கு கிளாராவையும் அவரது பங்காளிகளையும் தெரிந்து கொள்வது அவசியமாகும்.
சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் முது பெரும் தலைவர்களில் ஒருவரும், பாசிச இயக்கத்தின் வளர்ச்சிக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நின்றவருமான கிளாராவின் வாழ்க்கை உலகெங்கும் பாசிசத்திற்கும், முதலாளித்துவதற்கும், ஆணாதிக்கத்திற்கும் எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் பெண்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டலாகும்.
தனது வாழ்நாள் முழுவதும் உறுதி மிக்க கம்யூனிஸ்டாகவும், விட்டுக் கொடுக்காத பெண்விடுதலைப் போராளியாகவும் வாழ்ந்த மாபெரும் தலைவியை பெருமதிப்புடன் நினைவு கூர்வோம்.

தமிழ்நாடு புரட்சிகர மகளிர் முன்னணியினரால் வெளியிடப்பட்ட கிளாரா செற்கின் மகளிர் விடுதலை இயக்கங்கள்- மூன்று கட்டுரை என்ற சிறு நூலிருந்தும், HJEMME OG UTE எனும் செய்தி ஏட்டிலிருந்தும் சில பகுதிகளை நன்றியுடன் மறுபிரசுரம் செய்கிறோம்."

ZETKIN CLARO ( 1857 - 1933 )

**Claro Zetkin** தனது பதினேழாவது வயதில் லீப்சிக் மகளீர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியி சேர்ந்து நான்கு ஆண்டுகள் கல்வி பயின்றார். அந்நிறுவனத்தில் அப்போது பணியாற்றி வந்தவரு ஜெர்மனியப் பெண்ணிலைவாத இயக்கத்தின் தலைவியாக அந் நூற்றாண்டின் இறுதிவர விளங்கியவருமான அகஸ்டே செமிட் என்பவரிடம் கிளாரா கல்வி பயின்றார்.

இந்த கால கட்டத்தில் லீப்சிக் நகரில் இயங்கி வந்த புரட்சிகர சோசலிச மாணவர் வட்டத்துடனு ருசிய போலந்திலிருந்து குடி பெயர்ந்தோருடனும் தொடர்பு கொண்டார். இந்த வட்டத்தி மூலமாகத் தான் அவர் மார்க்சியம் பற்றிய தொடக்கப் பயிற்சியை பெற்றார். அத்துடன் ரஷ்சி பாட்டாளி வர்க்க இயக்கத்தில் அப்போது நடை பெற்று வந்த சித்தாந்தப் போராட்டங்கள் குறித் அறிமுகம் பெற்றுத் தெளிவடைந்தார்.

1870 ம் ஆண்டு முதல் கிளாரா ஜெர்மனிய சோசலிச இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டா சோசலிஸ்ட்டுக்களுக்கு எதிராக பிஸ்மார்க் கொண்டு வந்த விசேட சட்ட அமுலில் இருந் ஆண்டான 1881 ல் அவர் ஜெர்மனிய சமூக சனநாயகக் கட்சியில் உறுப்பினரானார். அக் கட்சியி தலைமறைவுப் பணிகளில் ஈடுபட்டார். அவருடைய கணவன் ' விரும்பத்தகாத அந்நியர்' என் குற்றஞ் சாட்டப்பட்டு ஜெர்மனியிலிருந்து நாடு கடத்தப்பட்ட பின் தம்பதிகள் அரசியல் அகதிகளா வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்நிலையில் கிளாரா பிரான்சு, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளின் சோசலிச இயக்கங்களில் பங்கேற்றார். அவர் சுவிட்சர்லாந்தில் தங்கியிருந்த போது சூரிச் நகரில் இருந்து வெளியிடப்பட்ட ' சமூக சனநாயகவாதி ' என்ற சட்ட விரோத பத்திரிகைக்கு ஆசிரியராக பணி புரிந்தார்.

1889 இல் பாரிஸ் நகரில் இரண்டாம் அகிலத்தை நிறுவும் பேராயம் நடை பெற்றது. அப் பேராயத்தின் அமைப்பாளர்களில் ஒருவராக கிளாரா விளங்கினார். அப் பேராயத்தில் அவர் பாட்டாளி வர்க்க மகளிர் இயக்கத்திற்கான திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தியும், சோசலிச புரட்சிகரப் போராட்டத்தில் மகளிர் பங்களிப்பு பற்றியும் பேசினார்.

" பெண்கள் சோசலிச தொழிலாளர்களுடன் தோளோடு தோள் நின்று போராட்டப் பணிகளில் ஈடுபடும் போது அனைத்து தியாகங்களையும் சிரமங்களையும் பகிர்ந்து கொள்ள தயாராக உள்ளனர். அதே நேரத்தில் வெற்றிக்குப் பின் அவர்கள் தங்களுடைய அனைத்து உரிமைகளையும் தாங்களே எடுத்துக் கொள்வதிலும் உறுதியாக உள்ளனர் " என்று கிளாரா தனது உரையில் குறிப்பிட்டார். இவ்வாறு ஒரு சர்வ தேச அரங்கில் மகளிர் சமத்துவத்தை ஒரு பெண் உயர்த்திப் பிடித்தது அதுவே முதன் முறையாகும். உண்மையில் கிளாரா முயன்று இணங்க வைத்ததன் காரணமாகத் தான் பல்வேறு நாடுகளிலும் புரட்சிகர சோசலிசத்திற்கான போராட்டத்தில் திரளாக மகளிரை அணி திரட்டுவதற்கு இரண்டாவது அகிலம் தூண்டுதல் அளித்தது.

மகளிர் பிரச்சனை பற்றிய இரண்டாம் அகிலத்தின் தீர்மானத்தின் பிரதிபலிப்பாக ஜெர்மன் சமூக சனநாயக கட்சியின் 1890 ஆம் ஆண்டு எர்ஃபர்ட் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட திட்ட அமைந்திருந்தது. அத் திட்டம் மகளிருக்கு முழுமையான பொருளாதார அரசியல் மற்றும் சட்ட ரீதியான சமத்துவத்தைக் கோரியது.

கிளாரா தனது கணவன் இறந்த பின் ஜெர்மனிக்கு திரும்பினார். அப்போது அங்கு சோசலிஸ்டுக்களுக்கு எதிரான விசேச தடைச் சட்டம் ரத்துச் செய்யப் பட்டிருந்தது. அங்கு சமூக சனநாயக் கட்சியின் மகளிர் இயக்கத்திற்கு கிளாரா தலைமையேற்றார்.

1892- 1916 வரை சமத்துவம் (Gleichheit ) என்ற ஜெர்மனிய உழைக்கும் மகளிர் செய்தித் தாளிற்கு பதிப்பாசிரியராக பணியாற்றினார். உழைக்கும் வர்க்க மகளிர் தமது சொந்த வர்க்க நலன்களைப் புரிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஊட்டுவதையும், முதலாளித்துவ மகளிர் இயக்கத்தின் மாய வலையிலிருந்து அவர்களை மீட்பதையும் தனது பிரதான கடமை என கருதினார். அவருடைய பெரு முயற்சியன் பயனாக ஜெர்மனிய பாட்டாளி வர்க்க மகளிர் இயக்கம் அதன் தொடக்க காலம் முதற் கொண்டே பொதுவான தொழிலாளர் இயக்கத்தின் பரிக்க முடியாத அங்கமாகவும், முதாலளித்துவ வாக்குரிமை வாத மகளிர் இயக்கதிதலிருந்தும் முற்றாக வேறுபட்ட சுதந்திரமான இயக்கமாக வளர்ச்சியடைந்தது. சோசலிச தொழிற்சங்கங்களில் மகளிரை அமைப்பாக்குவதற்கு கிளாராவும் மற்றைய பெண் சோசலிஸ்டுக்களும் மேற் கொண்ட பணிகள் உழைக்கும் மகளிரை தொழிலாள வர்க்க இயக்கத்திற்குள் வென்றெடுக்கும் பணியில் முக்கிய பங்காற்றின.

பெண்ணிலைவாத இயக்கம் தன்னுடைய கோரிக்கையை மகளிருக்கு வாக்குரிமை என்ற எல்லைக்குள் குறுக்கிக் கொண்டது. முதலாளித்துவ சமுதாயத்தின் சுரண்டல் உறவு முறைகளை சேதமுறாமல் அப்படியே விட்டு வைப்பதாகவே அக் கோரிக்கை அமைந்திருந்தது. இதன் விளைவாக சோசலிச மகளிர் இயக்கம் அதன் ஆரம்பம் முதலே தன்னை பெண்ணிலைவாதக் கண்ணோட்டத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டும் எல்லைகளை வரையறுத்துக் கொள்ள வேண்டி இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1896 இல் நடைபெற்ற ஜெர்மனிய சமூக சனநாய கட்சியின் பேராயத்தில் " பாட்டாளி வர்க்க மகளிர் இணைந்து செயற்படுவதன் மூலம் மட்டுமே சோசலிசம் வெற்றியடைய முடியும்" என்ற தலைப்பில் கிளாரா நிகழ்த்திய உரையில் தனது கருத்துக்களை ஆணித்தரமாக வெளியிட்டார். ' மகளிர் அனைவருக்கும் பொதுவானது ' என்று சொல்லக் கூடிய மகளிர் இயக்கம் எதுவும் கிடையாது. ஏனெனில் வர்க்கங்களாகப் பிளவுண்டிருக்கும் சமுதாயத்தில் ' முதலாளித்துவ மகளிர் இயக்கமும், உழைக்கும் வர்க்க மகளிர் இயக்கமும் மட்டுமே உள்ளன' ' அவற்றிற் கிடையில் உள்ள பொதுவான அம்சம் சமூக சனநாயகத்திற்கும் , முதலாளித்துவ சமுதாயத்திற்கும் இடையில் நிலவும் பொதுவான அம்சத்தை விட அதிகமாக ஒன்றும் இல்லை. ' அவர் மேலும் ' பாட்டாளி வர்க்கப் பெண் அவளுடைய பொருளாதாரா சுதந்திரத்தை முயன்று பெற்றிருக்கிறள், ஆனால் அவள் ஒரு நபர் என்ற முறையிலோ ஒரு பெண் என்ற முறையிலோ அல்லது ஒரு மனைவி என்ற முறையிலோ ஒரு தனிப்பட்ட நபராக முழுமையான வாழ்க்கை வாழ்வது சாத்தியம் இல்லாது இருக்கிறது. . . . . ஒரு மனைவி மற்றும் தாய் என்ற முறையில் அவளுடைய பணிகளுக்கு அவள் முதலாளித்துவ பொருளாதாரா உற்பத்தியின் எச்சில் இலைகளில் வீசி எறியப்படும் சில பருக்கைகள் மாத்திரமே ஊதியமாகப் பெறுகிறாள். எனலே பாட்டாளி வர்க்க மகளிர் விடுதலை இயக்கமானது - முதலாளித்து மகளிர் இயக்கத்தைப் போன்று - அவளுடைய வர்க்த்தைச் சார்ந்த ஆண்களுக்கு எதிராகப் போராடும் இயக்கமாக இருக்க முடியாது. . . அவளுடைய போராட்டத்தின் இறுதி இலட்சியம் ஆண்களுக்கு எதிரான சுதந்திரமான போட்டி அல்ல. மாறாக உழைக்கும் வர்க்க மகளிர் அதிகாரத்தைப் படைப்பதே ஆகும். உழைக்கும் வர்க்க மகளிர் தமது சொந்த வர்க்க ஆண்களுடன் தோளோடு தோள் இணைந்து நின்று முதலாளித்துவ சமுதாயத்தை எதிர்த்து போராடுகின்றனர் " முதலாளித்துவ சாண்டலை முடிவுக்கு கொண்டு வந்து சோசலிச சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே மகளிர் விடுதலை நடைமுறை சாத்தியமாகும். இம் மதிப்பீட்டிற்கு ஏற்ற வகையில் சமூக சனநாயக கட்சியன் பேராயம் தனது குறிப்புக்களில் பின்வருமாறு பதிவு செய்தது " உழைக்கும் வர்க்க மகளிருக்கும் இதர வர்க்க மகளிருக்கும் இடையில் சட்ட ரீதியான மற்றும் அரசியல் சீர் திருத்தங்களுக்கான கோரிக்கைகளில் பல பொதுவான அம்சங்கள் இருப்பினும் தீர்மானகரமான பொருளாதார நலன்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இடையில் பொதுவான பின்னனி எதுவும் இல்லை. எனவே உழைக்கும் மகளிர் விடுதலையானது அனைத்து வர்க்க மகளிரால் சாதிக்கப் பட முடியாது, மாறாக ஆண் பெண் பாலின வேறுபாடு இன்றி ஐக்கியப்படும் உழைக்கும் வர்க்கத்தால் மட்டுமே சாதிக்க முடியும் ".

1908 ஆம் ஆண்டு முதல் பெண்கள் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டனர். மேலும் மேலும் சீர்திருத்த வாதிகளாக மாறி வந்த சமூக சனநாயக கட்சியன் தலைமை அந்த ஆண்டு முதல் பத்திரிகையின் மீது அதிகரித்த அளவில் எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக பத்திரிகையின் கொள்கையை நிர்ணயிக்கும் உரிமை கிளாராவிடமிருந்து படிப்படியாக பறிக்கப் பட்டது. இதன் பிறகு பத்திரிகையில் ஆடை அலங்காரம், சமையல் கலை போன்றலை இடம் பெற்றன. சமூக சனநாய கட்சி சோசலிச மகளிர் இயக்கத்தின் தலைமை பதவியிலிருந்து கிளாராவை நீக்கி விட்டு அப் பதவியில் சீர்திருத்தவாதியை அமர்த்தியது. சமூக சனநாய கட்சியின் இடது சாரிப் பிரிவின் முன்ணனித் தலைவர்களில் ஒருவர் என்ற முறையில் கிளாரா அக் கால கட்டத்தில் திருத்தல் வாதத்தை எதிர்த்து இடையறாத போராட்டத்தை நடாத்தினார்.

கிளாராவின் முயற்சியினால் ஸ்டுட்கார்ட் நகரில் நடை பெற்ற இரண்டாவது அகிலத்தின் பேராயத்துடன் இணைந்து சர்வதேச மகளிர் மாநாடு சாராம்சத்தில் ஒரு சோசலிச மகளிர் அகிலமாக 1907 ஆம் ஆண்டு நடை பெற்றது. இம் மாநாட்டில் 15 நாடுகளிலிருந்து 59 மகளிர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அம் மாநாட்டில் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற கோரிக்கை குறித்தும் பெண்ணிலைவாதம் குறித்தும் கருத்து வேற்றுமைகள் தோன்றின. பிரான்சு, ஆஸ்திரியா, பெல்ஜியம், பிரிட்டன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் சொத்து மற்றும் வருவாய்த் தகுதிகள் அடிப்படையில் வரையறைக்குட்பட்ட வாக்குரிமைக்காக போராடுவது தான், வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமைக்காக போராடுவதைவிடவும் நடைமுறை சாத்தியமானது என்று வாதாடினார். கிளாராவும் அவரது ஆதரவாளர்களும் பெண்ணிலைவாத இயக்கம் பற்றி ' குறுங்குழுவாத ' மனப்பான்மை கொண்டிருப்பதாக பிரிட்டன் மற்றும் பிரான்சு நாட்டுப் பிரதிநிதிகள் விமர்சித்தனர். கிளாராவின் முரணற்ற மார்க்சிய கண்ணோட்டம் அலெக்சாண்டிரா கொலண்டாய் மற்றும் இதர பிரதிநிதிகளின் ஆதரவாலும் ஜெர்மன் பிரதிநிதிகள் பெரும்பான்மையாக இருந்த காரணத்தாலும் அன்றைக்கு வெற்றி முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்டுட்கார்ட் மநாட்டு தீர்மானங்கள் " அனைத்து நாடுகளின் சோசலிஸ்ட் கட்சிகளும் வயது வந்த மகளிர் அனைவருக்கும் வாக்குரிமை வேண்டும் என்று ஊக்கமுடன் போராட கடமை பட்டுள்ளன " என்றும் " சோசலிச மகளிர், முதலாளித்துவ பெண்ணிலைவாதிகளுடன் இணையக் கூடாது. மாறாக சோசலிச ஆண்களோடு அக்கம் பக்கமாக நின்று போராட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டும் " என்றும் கூறின.

1910 ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் நடை பெற்ற இரண்டாவது அகிலத்தின் பேராயம் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியது.

மார்ச் 8 ஆம் திகதியை சர்வதேச மகளிர் தினமாக அறிவிக்க வேண்டும் என கிளாரா தயாரித்த தீர்மானத்தை கோபன்ஹேகன் பேராயம் நிறைவேற்றியது. இவ்வாறு 1908 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி நியூயோர்க்கில் முதலாளித்துவ வாக்குரிமை இயக்கத்திற்கு எதிராக அமெரிக்க சோசலிச இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்திய அந்த நாள் உலகளவில் சோசலிச இயக்கத்தில் ஆண்டு தோறும் ஒரு முக்கிய தினமாக கடைப்பிடிக்கப் படுகிறது.
1911 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே ஜெர்மனி, ஆஸ்திரியா, சுவிட்சலாந்து டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பத்து லட்சத்திற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் சர்வதேச மகளிர் தின வெகுசன நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இராணுவ வெறி, ஏகாதிபத்தியம், காலனியவாதம் ஆகியவற்றுக்கு எதிராக இயக்கங்கள் நடத்துவதில் இடது சாரி சோசலிஸ்ட்டுக்களுடன் கிளாரா இணைந்து நின்றார்.
1912 இல் பாஸ்லேயில் நடைபெற்ற இரண்டாவது அகிலத்தின் பேராயத்தில் ஏகாதிபத்திய போர் அபாயத்திற்கு எதிராக தீவிரமாகப் போராடும் படி சர்வதேச தொழிலாளர் இயக்கத்திற்கு கிளாரா அறைகூவல் விடுத்தார்.

" உழைக்கும் வர்க்கப் பெண்களே தயாரயிருங்கள் " என்ற கட்டுரையில் யுத்தம் பெரும் நிலப்பிரபுத்துவ கோமான்களுக்கும் முதலாளிகளுக்கும் மட்டுமே பயன் தரக் கூடியது. என வாதிட்டார். . " உழைக்கும் வர்க்கத்திற்கு மக்களிடையே சகோதரத்துவம் என்பது வெற்றுக் கனவல்ல. உலக அமைதி வெறும் அழகிய சொற்றொடர் அல்ல. . . அதற்காக செய்ய வேண்டியது என்ன ? ஒவ்வொருவரும் சித்தமாக இருந்தால் அனைத்தையும் வெற்றி கொள்ளும் தருணம் கண்ணெதிரே உள்ளது. உழைக்கும் மகளிரே, தயாராகுங்கள் " என ஒரு புரட்சிகரமான போராட்டத்திற்கு மறைமுகமான அறை கூவலுடன் அக்கட்டுரையை முடித்தார்.

சர்வதேச அரங்கில் அவர் நிகழ்த்திய உரைகளில் முக்கியமான ஒன்று ஆம்ஸ்டர்டாமில் 1932 ஆம் ஆண்டு நடந்த யுத்த எதிர்ப்பு பேராயத்தில் நிகழ்த்தியதாகும்.
1920 ஆம் ஆண்டுக்குப் பின்பு கிளாரா பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1932 இல் பாராளுமன்ற கூட்டத் தொடரின் துவக்க உரை நிகழ்த்த முதுபெரும் அங்கத்தவர் என்ற முறையில் அழைக்கப்பட்டார். 'அவர் ஜெர்மன் பாராளுமன்றத்தினுள் நுழைய துணிந்தால் அவருடன் கணக்குத் தீர்த்துக் கொள்ளப்படும்' என்ற பாசிச பத்திரிகைகளின் மிரட்டலுக்கு அஞ்சாமல் அந் நிகழ்ச்சிக்காக அவர் தனது தள்ளாத வயதிலும் மொஸ்கோவிலிருந்து பேர்லினுக்கு பயணமானார். ஜெர்மன் பாராளுமன்றத்தில் பாசிஸ்ட்டுகளுக்கு எதிராக உணர்ச்சி மிக்க உரையாற்றினார். சமூக சனநாயக கட்சியின் சமரசப் போக்கை அம்பலப் படுத்தியும், பாசிச எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைக் கட்டுமாறு அறைகூவல் விடுத்தும் புரட்சிகர உரையாற்றினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெர்மன் சமூக சனநாயகக் கட்சி முதலாளிகளிடம் சரணடைந்ததே ஜெர்மனியில் பாசிசம் வெற்றி அடைவதற்கான அடிப்படைக் காரணம் என கிளாரா கருதினார். தனது இறுதிக் காலத்தில் நடுங்கும் கரங்களால் எழுதிய முற்றுப் பெறாத கட்டுரையின் கடைசி வரிகளில் " அன்று பிரான்சின் முதலாம் பிரான்சிஸ் பவேரியா போரில் தோற்றுவிட்ட பிறகு எழுதினான் ' மானத்தை தவிர எல்லாவற்றையும் இழந்து விட்டேன் ' என்று. இத்தகைய பெருமை மிக்க வார்த்தைகளுக்கு நேர்மாறாக இரண்டாவது அகிலம் கீழ் கண்டவாறு பிரகடனம் செய்ய வேண்டும். எல்லாவற்றையும் இழந்து விட்டோம். முதலாளித்துவ உலகிலிருந்து பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காகவும், உழைக்கும் மக்களின் விடுதலைக்காகவும் போராடியவர்கள் என்ற பெருமையை வேறு எல்லாவற்றிற்கும் மேலாக இழந்து விட்டோம். ஜெர்மன் சமூக சனநாயகம் புரட்சிகர மார்க்சியத்தைக் காட்டிக் கொடுத்திலிருந்து தொடங்கி எப்போதும் துரோகங்களையே செய்து வந்துள்ள இரண்டாவது அகிலம் தனது அழிவை தானே தேடிக் கொண்டது" என்று குறிப்பிட்டார்.

கிளாராவினது நினைவுக் குறிப்பாக லெனின் எழுதிய A LIFE LONG FRIEND 1929 இல் வெளியிடப்பட்டது. இறுதிக் காலத்தை சோவியத்தில் கழித்த இவர் அங்கேயே மரணமடைந்தார். ஆனால் தனது செல்வாக்கை ஜெர்மனியில் ஒருபோதும் இழக்கவில்லை. மார்க்சியவாதியும், சுறுசுறுப்பான உழைப்பாளியும் polemical எழுத்தாளரும் , பெண்ணிலைவாதியுமான கிளாரா Engels , Bebbel இற்கு அடுத்ததாக மார்கசிய தத்துவத்துடன் பெண்விடுதலை தொடர்பாக பல ஆக்கங்களை வழங்கியுள்ளார்.


# 18வது இலக்கியச்சந்திப்பு

நெதர்லாந்து

சனி: 07-08-93

ஞாயிறு: 08-08-93

நிகழ்ச்சி மண்டபம்

CUNERA
Nieuwe Gracht 32
Utrecht
NEDERLAND





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களும் மக்கள் தொடர்பு சாதனங்களும்.

## சுமதி.



அன்றாட வாழ்க்கையில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் மிகப் பெரும் பங்கினை வகிக்கின்றன. சனத்தொகையில் சரிபாதியும் உணவுத் தேவையின் பெருமளவில் உற்பத்தி செய்வதில் ஈடுபடுவோரும், பூரண சுதந்திரத்தை அநுபவிக்காத, முடியாத, முயலாத, முனைந்து போராடுகின்ற பெண்கள் தொடர்பாக இத் தொடர்பு சாதனங்களின் செயற்பாடு பற்றி பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கருத்துக்களைப் பரப்புதல்.

கருத்துக்கள் மீது செல்வாக்கு செலுத்துதல்.

கருத்துக்களை உருவாக்குதல், மாற்றல், வளர்த்தலில் ஈடுபடுதல்.

தொடர்பு சாதனங்கள் மூலம் வெளிக் கொணரப்படும் கருத்துக்களை விமர்சனங்களோ, விவாதங்களோ இன்றி ஏற்றுக் கொள்ளும் சிந்தனையை ஊக்குவித்தல்/ வளர்த்தல்.

பெண்களின் உண்மையான தோற்றத்தை வெளிப்படுத்தாது திரிபு படுத்தி, உருவகப் படுத்திக் காட்டல்.

இரண்டாந்தரப் பிரசைகளாக, தங்கியிருப்பவளாக, இனவிருத்திக்கும், உடலின்பத்திற்கும் பயன்படுபவளாக சித்தரித்தல் போன்றவற்றில் மக்கள் தொடர்பு சாதனங்கள் பெரும் பங்கினை ஆற்றுகின்றன/ ஈடுபடுகின்றன.

பெரும்பாலும் எதைப்பற்றியாவது கலந்துரையாடும் போதோ, விவாதிக்கும் போதோ ஆதாரத்திற்கு பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி செய்திகளையே கூறிக்கொள்கிறோம். இத் தொடர்பு சாதனங்கள் பெரும்பாலும் வியாபார நோக்கமாகவும், நுகர்வோரைக் கவரக் கூடியதாக வியாபார முகவர், அரசு என்பவற்றின் கட்டுப்பாட்டின் கீழேயே இயங்கி வருகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது அநேகமானோருக்குத் தெரிந்திருந்தாலும். இச் சாதனங்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் பாதிப்பைக் கட்டுப்படுத்துவதோ, தவிர்ப்பதோ இயலாததாகும். அரசு, வியாபார முகவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றதாகவும், அவர்களது பார்வையும், அபிப்பிராயமுமே மக்களை வந்தடைகிறது. ( அண்மையில் ஆரம்பித்தி வளைகுடா யுத்தம் பற்றி ஐரோப்பிய மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கினை யாரும் மறந்திருக்க முடியாது.)

தொலைக்காட்சி ஒலிபரப்பில் பெண்கள் தாய், மனைவி, தங்கியிருந்து வாழ்பவள், இனவிருத்தியில் ஈடுபடுபவள், பாராமரிப்பில் ஈடுபடுவளாகவே திரும்பத் திரும்ப காட்டி நகர்கிறது. வேலை செய்யும் பெண்கள் பக்கம் பார்வையைத் திருப்பினாலும் குறிப்பாக பாரம்பரிய தொழில் துறைகளில் ஈடுபடுவோரை பற்றிய செய்திகள் மட்டுமே ஒலிபரப்பப்படுகிறது.

பின்தங்கிய பகுதிகளில் உணவு உற்பத்தியில் ஈடுபடுவோரில் மூன்றில் இரண்டு பகுதியினர் பெண்களே. உணவுத் தேவையின் 50% பெண்களாலேயே பூர்த்தி செய்யப்படுகிறது. உழவு, நாற்று நடுதல், களை எடுத்தல், உரம் இடல், அறுவடை போன்றவற்றில் பெண்கள் ஈடுபடுவதுடன் சில சந்தர்ப்பங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் ஈடுபடுகின்றனர். ஆனால் கடும் உழைப்பாளிகளாக , விவசாயிகளாக, பொதுவாக ஆண்களே தொலைக்காட்சியில் காட்டப்படுகின்றனர். பெரும்பாலானா விவரணக்காட்சிகள், ஆராய்ச்சி துறையில் ஈடுபடுதல் போன்றவை தனியே ஆண்கள் பற்றியதாக அமைகிறது. இது தனியே தொலைக்காட்சி சேவையுடன் நின்றுவிடாது சிறுவர் புத்தங்களிலும், பாடப் புத்தங்களிலும் தொடர்கிறது.
சில உதாரணங்களாக பின்வருவனவற்றினைக் கூறலாம் : அப்பா சாய்வு நாற்காலியில் பத்திரிகையுடன் அமர்ந்திருக்கும் படம், பாட்டி கன்றைக் கட்டுகிறார், அம்மா தம்பிக்கு உணவு ஊட்டுகிறார், போன்ற சில வாக்கியங்களுடன் பாடசாலை வாழ்க்கை ஆரம்பமாகிறது.
பாடசாலை வாழ்க்கையில்

' 1. அம்மா நான் விளையாடப் போறன்
கையில் அன்புடன் பட்சணம்
தந்தனுப்பென்னை - சும்மா
நான் உக்கார மாட்டேன் - நல்ல
தோழர் அழைக்கின்ற
நாழிகையாச்சு . . . .

2. வீசி ஆடும் ஊஞ்சலாம்
விண்ணில் ஏறும் ஊஞ்சலாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசை அக்கா பாடவே

அன்புத் தங்கை ஆடுவாள். . .

3. கந்தன் நல்ல கமக்காரன்

காய்கறித் தோட்டம்

செய்திடுவான். . . .' போன்ற பாடல்கள் மூலம் தோட்ட வேலைகளில் தனியே ஆண்களே ஈடுபடுபவர்களாகவும், ஆண் பிள்ளைகள் வெளியே சென்று விளையாடுபவர்களாகவும், அக்காவும் தங்கையும் வீட்டிற்கு வெளியே செல்லாது உள்ளேயே விளையாடுபவர்களாகவும் சித்திரிக்கப்படுகிறது.

பெண்களை பலவீனமானவர்களாவும், தாழ்வாகவும், ஆண்களை வீரமானவர்களாவும், உயர்வாகவும் கூறும் பழமொழிகளும் பாடப் புத்தங்களிலுண்டு. இக் கருத்துக்கள் குழந்தைகளின் மனதில் ஆழப்பதிந்து விடுகின்றன.

பாட நூல்கள் வாழ்கின்ற சூழலின் பிரதிபலிப்பு என்பது பலரின் கருத்து. வாழ்நிலையின் பிரதிபலிப்பினை சேர்ந்து வாழும் ஓர் இனத்தினை பாதிக்காதவாறும் வெளிக்காட்ட முடியும். (மாகாவம்சம் திரிபுபடுத்தப்பட்டுள்ளது என்றதும் துள்ளி எழுந்த பலர் பாடப்புத்தங்களில் இத்திரிபு சுட்டிக்காட்டப்படும் போது அமைதியாகவே இருந்தனர்.)

அடுத்து பொழுது போக்காகக் கேட்கும் வானொலி, வாசிக்கும் சஞ்சிகைகள் (பெரும்பாலானவை இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுவபவை) திரைப்படங்கள் (முழுவதும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுபவை ) யாவும் பெண்ணை இழிவாகவே சித்தரிக்கின்றன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக ஒலிபரப்பில் மங்கையர் மஞ்சரி, வீட்டுக்கு வீடு, அழகுக் குறிப்பு, சமையல் குறிப்பு, அழகாக இருப்பது எப்படி ? போன்ற விடயங்களுடன் பாரம்பரிய மரபுகளைப் பேணும் வகையில் இசையும் கதையும், நாவல்கள், ஒலிபரப்பப் பட்டு வருகின்றன.

மிக மிகக் குறைந்தளவு திரைப்படங்களும், நாவல்களும் சிறுகதைகளும் சற்று வித்தியாசமான முறையில் வெளி வருகின்றன. தமிழ் மக்களிடையே செலுத்தி வருவது திரைப்படங்களாகும்.

சுயமாக எமக்கென ஓர் கலைவடிவத்தை உருவாக்க இயலாத, எமது சமூகத்தின் முரண்பாடுகள், பிரச்சனைகள் என்பவற்றை மக்கள் மத்தியில் கொண்டுவர இயலாத நாம் இன்றுவரை தமிழ் நாட்டின் திரைப்படங்களிலே மூழ்கி எம்மை மறந்திருக்கிறோம்.

கலைகளை வளர்த்தெடுப்பதிலும், கலைஞர்களை ஊக்குவிப்பதிலும் நாம் மிகவும் பிந்தி தங்கியே உள்ளோம்.

திரைப்படங்களில் பெண் பேராசை, பொறாமை கொண்டவளாகவும், ஆண் தொட்டால் உதிரந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடும் கற்பைக் கொண்டவளாகவும் சித்திரிக்கப்படுவதும், கற்பை உதிராமல் தடுக்க ஆண் பறந்தோடி வருவதும், கண்ணுக்கு குளிர்ச்சியாகவும், அழகான, அலங்கரிக்கப்பட்ட பொம்மைகளாக பெண்கள் பாத்திரம் அமைக்கப்படுவதுடன் பக்க சார்பான பலவற்றிற்கு நியாயம் கோரி நிற்பவளாக சித்தரிக்கப்படுகிறாள். அத்தோடு சினிமா பாடல்களும் அன்றைய கண்ணதாசனின்

' கோப்பையிலே என் குடியிருப்பு
கோலமகள் என் துணையிருப்பு'. . . தொடங்கி
'மண்ணில் இந்த. . . .
முடிமுதல் அடிவரை
முழுவதும் சுகம் தரும்
விருந்துகள் படைத்திடும்
அரங்கமும் இவள் அல்லவா. . . ' போன்ற பெண்களை தனியே பாலியல் நுகர்வுப் பொருளாகக் காட்டும் பாடல்களும்

'மலர்களைப் போல் தங்கை உறங்குகிறாள்
அண்ணன் வாழ வைப்பான் என்று. . . '

போன்ற பல பாடல்கள் மூலம் பெண் எப்போதும் ஆண்களிலேயே தங்கியிருப்பவளாகக் கருதப்படுகிறது. கருத்துக்கள் திரிபு படுத்தப்படுவதுடன், மறைமுகமாக பலவீனமாக கருத்துக்கள் ஆரம்பத்திலேயே மனதில் பதிக்கப்படுகிறது. இத்தன்மைக்கு புலம் பெயர்நத சமூகமும் விதிவிலக்கல்ல. ஐரோப்பிய சூழலில் வாழ்ந்தாலும் பொழுது போக்குகள் பெரும்பாலும் திரைப்படங்களும் சஞ்சிகைகளுமே.

இந்நிலை மேலும் தொடராது இருக்க பெண்கள் தாதி, ஆசிரியை, விமானப்பணிப்பெண், உல்லாசப் பிரயாணத்துறை, வியாபார நிறுவனர்களில் விற்பனையாளர்களாக பணிபுரிதல் போன்ற பாராம்பரிய துறைகளில் மட்டும் கவனத்தைச் செலுத்தாது ஏனைய துறைகளிலும் கல்வி வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும்.

சமூக நலனில் அக்கறையுடன் எழுதி வரும் எழுத்தாளர்களின் உதவியுடன் காலம் காலமாகப் பாவிக்கப்பட்டு வந்த கருத்திழிவான சொற்பதங்கள் நீக்கப்பட்டு புதிய சொற்பதங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவேண்டும்.

பக்கசார்பான பழமொழிகள் வழக்கில் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும்.

பாடநூல், பாடவிதானங்களை தயாரிக்கும் பொறுப்புக்களுடைய பகுதிகளில் பெண்ணுரிமை கருத்துக்கள் கொண்ட பெண்கள் அங்கம் வகிக்க வேண்டும்.

மக்கள் தொடர்பு சாதனங்கள் சமூகத்தின் உண்மை நிலையை பிரதிபலிப்பதுடன், அச் சமூகத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறைபாடுகளைக் களைதலில் ஆர்வம் காட்டும் பணிகளில் ஈடுபட வேண்டும்.

கருத்துக்களை மாற்றுதல், எண்ணங்களை சீர்படுத்துதல் போன்றவற்றில் மக்கள் தொடர்பு சாதனங்களின் செயற்பாடு மட்டும் போதுமானதல்ல. சமூகத்தின் சகல அங்கத்தவர்களும் பொறுப்புணர்வுடன் செயலப்பட வேண்டும்.

" இக் கட்டுரையில் முதலாளித்துவ அரசும், விளம்பர முகவர்களும் எவ்வாறு பெண்களை சித்தரிக்கின்றனர் என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இவை பற்றி தனியே பிறிதொரு சந்தர்ப்பத்தில் எழுதலாம் என நினைத்துள்ளேன். "

கட்டுரை ஆசிரியர்.

நன்றி: நமது குரல்

## மாற்றப்பட வேண்டிய தாலாட்டு.

தொடுவானில்
பஞ்சுமேகங்களின் அரவணைப்பில்
நட்சத்திரங்கள் விளக்குப் பிடிக்க
நிலவு தூங்குவது போல.

காற்றின் சேதி கேட்டு
மகிழும் மரங்களில்
பனித்துளியைப் போர்வையாக்கி
தூங்கும் பூக்களைப் போல.

ஆராரோ ஆரிவரோ
தாய்மார்கள் பாட
தமை மறந்து துயிலும்
மகள்மார்கள்.

கண்ணீர் தெளிக்கும் பன்னீர் செம்புகளாக
ஒய்விழந்த இயந்திரமாக
கசக்கி மணக்கும் பூக்களாக
மண்ணில் புதையும்
எத்தனையோ வித்துக்கள்.

இனி
தாலாட்டுப்பாடி
தூங்க வைத்தது போகட்டும்.

மிதிக்கும் சப்பாத்துக்களும்
நொறுக்கும் சங்கிலிகளும்
பாடல்களின் கருப்பொருளாகட்டும்.

**பிரியதர்சினி.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதம்

அன்புடையீர்,

சக்தி காலங்கழித்து மீண்டும் வெளிவந்தமை பற்றி மகிழ்வுற்றேன். சக்தி பற்றி திரு மணிவண்ணனுடைய விமர்சனக் கடிதம், சித்தரலேகாவிற்குப் ' பட்டஞ் சூட்டிதன் ' மூலம் தன் தரத்தை இறக்கிவிட்டது. ராஜேஸ்வரியின் கதை, கதாநாயகிக்குத் தீர்வெதையும் தராமை ஒரு குறைபாடென்றால், தீர்வுகளைத் தருகிற ' நீதிக்கதைகளை ' மட்டும்தான் அங்கீகரிக்க வேண்டிய நிலை ஏற்படும். அந்தக் கதையின் கோளாறு கதையமைப்பிலேயே உள்ளது. ஏதோ ஒரு கருத்தை வலியுறுத்த வேண்டி ஒரு விநோதமான விபச்சாரியை உருவாக்கியிருக்கிறார். ஒரு விபச்சாரிக்குக் கூட எவனுடன் பாலுறவு கொள்வது என்பதிற் தெரிவு உண்டு என்பதை வலியுறுத்த ஒரு சாதாரண விபச்சாரியையே உதாரணமாகக் கையாண்டிருக்க முடியும். இது கதை சொல்பவருக்ககுத் தன் ஆற்றல் மீதுள்ள நம்பிக்கையீனம் காரணமான பிசகோ தெரியவில்லை.

'ஜெயலலிதாவின் தேசம் ' கட்டுரையை எழுதியவர் எனது ' வழிகாட்டலைப் ' பின்பற்ற வண்டிய நிர்ப்பந்தம் இல்லை. சில இடங்களில் நிலைமைகளைத் தெளிவாக விளக்கத் ' தரங்குறைந்த ' சொற்களை ஒரு எழுத்தாளர் பாவிக்க நேரிடலாம். அவை கையாளப்படும் நோக்கமும் பாங்குமே அங்கு முக்கியமானவை. பொதுவாகச் சாதி, பாலியல், இனம், மதம், நிறம் போன்ற அடிப்படைகளில் மனிதரை நிந்திக்குஞ் சொற்களைப் பேச்சிலும் எழுத்திலும் தவிர்ப்பது நல்லது. ஆனால் அவை சமூக வழக்கில் இல்லையெனப் பாசாங்கு செய்ய முடியாது.

ஒரு ஸ்தாபன ரீதியான பத்திரிகை தவிர்நத ஏனைய எந்த ஒரு ஏடுமே வெளிவரும் ஆக்கங்கட்கு முழுப் பொறுப்பையும் ஏற்க முடியாது. மனிதம் அவ்வாறு பொறுப்பேற்பதால் மட்டும் மற்றப் பத்திரிகைகளை விட மேலானதாகி விடாது. வழங்கும் ஆக்கங்கட்குப் பொறுப்பேற்பதற்கும் பொறுப்புடன் ஆக்கங்களை வழங்குவதற்கும் வேறுபாடு உண்டு. ஸ்தாபனச் சார்பற்ற ஏடுகள் பின்னைய முறையிற் செயற்படுவதே அதிகம் நடைமுறைச் சாத்தியமானது.

ராஜினியன் கடிதம் சக்தியில் அரசியற்கட்டுரைகள் வேண்டாமென்கிறது. சக்தி பெண்களுக்கான ஏடு. அதில் அரசியலே வேண்டாமென்பது பெண்களுக்கு அரசியல் வேண்டாமென்ற கருத்தை நெருங்கி விடலாம். என்னளவிற், பெண்கள் அரசியற் கட்டுரைகளை எழுதுவதைச் சக்தி ஊக்குவிக்குமாயின் அது வரவேற்கத் தக்கது. ராஜினி உடன்படுவாரென நம்புகிறேன்.

கொற்றவையின் கவிதைகள் எடுப்பாக உள்ளன. மற்றவையும் பொதுவாக நன்றாகவே உள்ளன. கருக்கலைப்பு பற்றிய அகல்யாவின் கட்டுரை மிகவும் வரவேற்கத்தக்க படைப்பு. இதுபோல் மேலும் பல வர வேண்டும். முன்போக்குச் சிந்தனை ஆணாதிக்க நிழலிருந்து முற்றாக விடுபட வேண்டிய அவசியத்தை மிகவும் சரியாகவே சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த இதழ் வருஷம் மாதம் இலக்கம் ஏதுமில்லாது வந்தமை ஏனோ தெரியவில்லை ! எனினும் முன்னிலும் பன்மடங்கு பொலிவாக உள்ள இந்த இதழின் தரம் மேலும் வளர என் நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்
சிவசேகரம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'மூளை' க்குள் ஓர் சமையலறை



**.நந்தினி.**

நாள் முழுவதும் குடும்பத்திற்கு உழைத்த களைப்பில், சில மணித்தியாலங்களுக்குக் கிடைக்கும் அந்த இரவு நேர ஓய்வை- அதுவும் கணவன் வீட்டில் இல்லாத நாட்களில் தான்- ஒரு பெரும் வரப்பிரசாதமாய்க் கருதிய தனலட்சுமி, ஆளுக்கொரு கோணத்தில் உருண்டு கிடந்த குழந்தைகளுக்கிடையே இடம் பிடித்து சீலையை விரித்து " அப்பனே. . ." என்று சரிந்தாள்.

படுத்தவுடனே நித்திரைகொள்ளும் வழக்கம் அவளுக்கில்லை. ஒரு பதினைந்து நிமிடமாவது உருண்ட பின்புதான் கண்கள் ஓய்வெடுக்கும்.

அந்த பதினைந்து நிமிடம்தானும் விரயமாக்கத் தெரியாத அவள் மூளை கம்பியூட்டராய் அடுத்த நாளுக்கான வேலைத்திட்டபட்டியல்களை பதிவு செய்தது.

"நாளைக்கு . . . செவ்வாய்க்கிழமை. ஐஞ்சரை மணிக்கெண்டாலும் ஒழும்பினாதான் அலுவல் முடிச்சு பிள்ளைகள பள்ளிக்கு அனுப்பலாம். மூத்தவள் ஏதோ ' ஒ எல் ' சோதனைக்கு பின்னேர வகுப்பு வைக்கிறாங்களாம் எண்டவள். . .தோசைய ஒரேதா மத்தியானத்துக்குஞ் சேத்துக் கட்டிக்குடுப்பம். . . பாவம் பெட்ட. . . பசிக்களையோட வரும். .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" ஹும்ம். . . கால் சரியா நோகுது. . குழவிக் கல்ல கழுவியெடுக்கேக்க ஒரு நாளுமில்லாம அந்தச் சனியன் காலில விழுந்து துலைச்சிட்டுது. . புதன் கிழமை சின்னவனைக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு என்னெண்டு அம்மளவு தூரம் நடக்கிறது. இந்த மனிசன் நினைச்சா சைக்கிளில கொண்டு வந்து விடலாம். இது எங்க வரப்போகுது. . . சைக்கிளில்லாட்டி நடந்துதானே போகவேணும். . .ஏதோ சீதனமாக் கொண்டு வந்தாப் போல பெரிய உரிமையா கேக்குற. . .எண்டும். அதிட்டப் போய் கேக்கிறத விட நடந்தே போயிடலாம். . என்ன செய்யிறது. . .கட்டாயம் புதன் கிழமைக்கு கட்டாயம் ஊசி போடக் கொண்டு போகவேணும். இந்தக் காலோட அவ்வளவு தூரம் நடக்கேலாது. . . எதுக்கும் கேட்டுப் பாப்பம்.. . போகேக்க எண்டாலும் சைக்கிள்ள கொண்டு போய் விடச் சொல்லி . . .வரேக்க ஒருமாதிரி நடந்து வந்திடலாம். . .

சமையலறையில் ஏதோ உருட்டிக் கேட்டது. நோப்பட்ட காலை மறந்தவளாய் துள்ளி எழுந்தவள் வலி பொறுக்காமல் அப்படியே தரையில் குந்தி விட்டாள்.
"அய்யோ . . . . அம்மாளாச்சீ. . . . வலி தாங்கேலாதே . . . இந்த நாசமா போன எலிச் சனியன்கள் மனிசர நிம்மதியாக் கிடக்கவும் விடுதுகளே. . .. . . " அரற்றியபடி குசினிக்குள் சென்று மாப்பானையைப் பார்த்து விட்டு வந்தாள்.

அப்படித்தான் அன்றைக்கும் ஒரு நாள் . . மயில்வாகனம். அதுதான் அவள் கணவன் இரவு வீட்டில் இருந்தான். அவள் மினக்கெட்டு தோசைக்கு அரைத்துக் கரைத்து வைத்துவிட்டு வந்து படுத்தாள். எலி குசினிக்குள் உருட்டு சத்தம் கேட்டு எழுந்தாள். ஆனால், தனது இன்பத்தை இடையில் முறிக்க விரும்பாத அவள் கணவன் தன்னிடம் உடல் கைதியாக இருந்த அவளை எழும்பிப்ப போக விடவில்லை. . . அடுத்த நாள் காலையில் அவள் மாப்பானையைத் திறந்த போது . . . ஒரு பெரிய எலி மாவில் மூழ்கி இறந்து கிடப்பதைக் கண்டாள். பள்ளிக்குச் செல்ல பிள்ளைகள் பரபரத்தனர். . . கணவனிடம் பாண் வாங்கி வரும்படி தயங்கி தயங்கி அவள் சொல்லி முடிப்பதற்குள் ' பளார் ' . . என்று ஒரு அறை விழுந்தது. . .
" என்னடி பானைய ஒழுங்கா மூடி வைச்சிருந்தா ஏன் எலி விழப் போகுது. . . . " தூசன வார்த்தைகள் தொடர்ந்தன.
கசப்பான நிகழ்வுகள் ஞாபகத்திற்கு வர அவளது முகம் வெறுப்பில் சுளித்தது.
"எளிய மனிசன். . ."
மீண்டும் வந்து படுத்துக் கொண்டாள்.
அருகில் படுத்திருந்த கடைசி மகன் காலைத் தூக்கி தாயின் மேல் போட்டுக் கொண்டான். அன்புடன் அவனது தலையை தனது மெலிந்த விரல்களால் வருடிக் கொடுத்துக் கொஞ்சினாள். தாயின் அரவணைப்பில் இருந்த சிறுவன் பாதுகாப்புணர்வினால் தூண்டப்பட்டவனாய் தாயை இறுக அணைத்துக் கொண்டான்.

முன்பு ஒரு நாள். . .மூத்தமகள் குழந்தையாய் இருந்த போது தகப்பனை அணைத்துக் கொண்டு படுத்திருந்தவள் மூத்திரம் பெய்துவிட்டாள்.
" இந்தச் சனியனத் தூக்கி அங்கால கிடத்து . . ." என்று திட்டியபடி குழந்தையை கையால் நெட்டி தள்ளி விட்டான் மயில்வாகனம். அதற்குப் பிறகு மூத்திரம் பெஞ்சு விடுவார்கள் என்று அவன் ஒரு பிள்ளையையும் பக்கத்தில் படுக்க விடுவதில்லை.
"பிள்ளைப்பாசம் இல்லாத சாதி. . . " வாய்க்குள் முணுமுணுத்தாள் தனம்.

செவ்வாய் வெள்ளி விரத நாட்களில் வீடு கழுவித்தான் உலைபானையை அடுப்பில் வைப்பாள். இல்லாவிட்டாள் அன்றைய பொழுதே விடியாதது போன்ற ஏக்கம் தான் அவளுள் நிறைந்திருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நாளைக்கு செவ்வாய்க் கிழமை விரதம். . . நான் இந்த நொண்டிக் காலோட வீட்டக் கழுவி அடுப்பு மெழுகி வைக்க இந்த மனிசன் என்ன நரகலக் கொண்டு வந்து சமைக்கச் சொல்லுதோ. . அம்மாளாச்சி தான் அதின்ர மனசுக்குப் புத்தியக் குடுக்கணும்.. . . "

கடந்த விநாயக சதுர்த்தியன்று நடந்தது அவளது ஞாபகத்திற்கு வந்தது. . . . அவள் வீடு கழுவி, அடுப்பு மெழுகி, பாத்திரம் தேய்த்து, முற்றம் கூட்டி , சாணி தெளித்து, சீயக்காய் வைத்து முழுகி விட்டு ஆசாரமாய் சமையலுக்கு ஆயத்தமானாள். . . .அந்த நேரம் பார்த்து மாட்டிறைச்சியுடன் வந்து சேர்ந்தான் மயில்வாகனம்.
அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. அன்று ஒரு புனிதமான நாள் என்பதை பலவாறு எடுத்துச் சொன்னாள்.. . .
அவன் வெடிச் சிரிப்புச் சிரித்தான். . . . மிக உருக்கமாய் கெஞ்சினாள். . .
"எடியே விசரி. . விநாயகர் மாட்டிறச்சியத்தான் நல்ல விருப்பமாய் சாப்பிடுவாராம். . சதுத்தியண்டைக்கு தனக்கு கட்டாயம் மாட்டுச் குப்பு வைச்சுப் படைக்கச் சொல்லி சொல்லியருக்கிறார். . " என்றபடி அவள் விரத நாட்களுக்கென்றே பாவிக்க வைத்திருக்கும் சட்டி ஒன்றில் இறைச்சியைப் போட்டு விட்டான்.
தனது 'புனிதமான' விரதமே தீட்டுப்பட்டு விட்டதைக் கண்ட அவள் துடித்துப் போனாள். . . பிறகென்ன. . அவனது அடி உதைக்குப் பயந்து அழுதபடி சமைத்ததுதான்.
"நாளைக்கும் இந்த மனிசன் என்னத்தக் கொண்டுவரப் போகுதோ. . பின்னேரமா வந்துதெண்டா நல்லம். . .

மத்தியானத்துக்கு என்ன சமையல் செய்யலாம். . . .
வெண்டிக்காய் பொரிச்ச குழம்பு. . . அது இந்த மனிசனுக்குப் பிடிக்காது. . . ஆரெண்டாலும் வெண்டிக்காயில குழம்பு வைப்பினமோ எண்டு கேக்கும்.. . .
கத்தரிக்காயில குழம்பு வைச்சு. . . . வெண்டிக்காய் வெள்ளக்கறி. . . . ஏதெண்டாலும் இலைக்கறி செய்யலாம். . . மனிசனுக்குப் பொன்னாங்காணிக் கீரை பிடிக்காது. . . முளைக்கீரைதான் பிடிக்கும். . .
பொன்னாங்காணியிலய அவிச்சு சம்பல் அரைச்சு எலுமிச்சம் புளியும் கொஞ்சம் விட்டா என்ன சோக்காயிருக்கும். .
ஹும். . இந்த மனிசன் சாணி மாதிரி இருக்கெண்டு பேசும். . . .
முளைக்கீரையில காச்சுவம். . . . அப் மூண்டு கறியும். . . அப்பளப் பொரியலும். . .இரசம். . வேண்டாம். . .
நேற்றும் இண்டைக்கும் இரசம் வைச்சாச்சு. . . நாளைக்கும் வைச்சா மனிசன் பேசும்.

"காலையில பிள்ளையள பள்ளிக்கு அனுப்பி கையோட பாத்திரங்கள தேச்சிட்டு. . வீட்டக் கழுவத் தொடங்கினாத்தான் பதினொரு மணிக்கு சமைக்க வெளிக்கிடலாம்.
சீயக்காய் வெந்தயம் ஊறப்போடேல்ல. . . பறவாயில்ல விடியப் போடலாம். . .
அடுப்படிய ஒருக்கா உடைச்சி செய்யலாம் எண்டா. . இந்தக் காலோட அதுக்கெல்லாம் மினக்கெட ஏலாது.. . . இன்னுமொரு நாளைக்குத்தான் அடுப்பலுவல் பாக்கணும்.. . . . இந்த அடுப்பில சோத்துப் பானைய வைச்சி வடிக்க ஏலாது.. . . எத்தினை நாள் பானை வழுக்கி விழப் பாத்திருக்கு. . . ஏதோ அம்மாளாச்சி தான் காப்பாத்துறா. . . .

சமைச்சி முடிஞ்ச கையோட மாவ அடுப்பில வைக்கணும். . . . மாவுமில்ல. . . . காலம வெள்ளன பள்ளிக்குப் போறதுக்கு முதல்ல பெரிய பொடியன கடைக்கி அனுப்பி வாங்குவிக்கணும். . . . அரிசிமாவும் கொஞ்சந்தான் கிடக்கு. . . இந்த மனிசனுக்கு கோதுமை மா சாப்பாடு எண்டா இறங்காது. . . அரிசி மா தான் வேணும். . . . கோதுமை புட்டவிச்சு. . குழம்போட சாப்பிட நல்ல உருசையா இருக்கும். . இந்த மனிசன் தின்னாதே. . .

மத்தயானச் சமையல முடிச்சிட்டு, மாவையும் அரிச்சி அவிய வைச்சிட்டு. . . உங்க கிடக்கிற தலையாணிகள பிரிச்சி உறையில பச்சு அடைக்கணும். தலையாணியெல்லாம் ஊத்தையாக் கிடக்குதெண்டு மனிசன் நேத்தைக்குப் பேசிச்சுது. . . புதுத் தலையாணிகளக் கண்டா பிள்ளையள் நான் நீ எண்டு அடி படுவினம். . . .
சின்னவனுக்கு சின்னதா ஒரு தலையாணி தைக்கணும். . .
ராசம்மாக்கான்ர பெட்டையிட்டக் குடுத்தா உறையளுக்கு வடிவா பூத்தச்சித் தருவா. . . . கேட்டுப் பாப்பம்.. . . .
"சொன்னாப்போல. . நல்ல நேரம் ஞாபகத்தில வந்தது. . . . மனிசன்ர சேட்டுகளில பட்டின் அறுந்திருக்குதாம். . . பாத்துத் தைச்சு வைக்கேல்லையெண்டு சத்தம் போட்டிச்சிது. . . அதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே கையோட தைச்சிட வேணும். . . . .

கந்தையாண்ண வீட்டில பால் கறக்கவே ஆறு மணியாகுது. . . . . ஆறு மணிக்குப் பால் வாங்கிப் பிள்ளையளுக்கு தேத்தண்ணி ஊத்திக் குடுத்திட்டு கோயிலுக்குப் போக எங்க நேரமிருக்கப் போகுது. . .
கை வேலைகள முடிச்சிட்டு ஐஞ்சி மணிக்கெல்லாம் தேத்தண்ணி போட்டாத்தான் வெளிக்கிட்டுக் கொண்டு கோயிலுக்குப் போய்வர நேரம் சரியா இருக்கும்.. . . .
பாலக் காய்ச்சி உறைக்கு வைக்கலாம். . . நாளண்டைக்கு தயிர்ச்சாதம் செய்யலாம். . . .
தயிர்ச்சாதம் சாப்பிட்டு எம்மளவு நாளாகுது. . . பூமணியக்கான்ர கோயில் பூசையண்டைக்கு சாப்பிட்டது.
மனிசனுக்கு வேறயா சோறும் கறியும் காய்ச்சிட்டு நானும் பிள்ளையளும் தயிர்ச்சாதம் செய்து சாப்பிடலாம்.. . . .
அன்றைக்கொரு நாள் செய்ய வெளிக்கிட்டு இந்த மனிசனிட்டப் பேச்சு வாங்கினதான் மிச்சம். . .
தயிர் சாதமெல்லாம் விசர் வேலையாம்.. . . . ரெண்டு செலவாம். . .
"பெரிய பெட்டைக்கு பள்ளிக்கூட கவுண் .. . . . ." எண்ணியவாறு நித்திரையில் ஆழ்ந்து விட்டாள் தனலட்சுமி.

ஒரு சமையலறை இயந்திரத்தின் மூளை அடுத்த நாளைக்கான வேலைத்திட்டத்தை பதிவு செய்த களைப்பில் தானும் ஓய்வில் மூழ்கியது.

## ஒரு நிம்மதியற்ற சோகம்.

மெல்லிய நிலவொளி கலந்த
இரவும்,
வீசிச் சுழலும் காற்றிடை
சலசலக்கும் வெண்கல பனித்துகளும்,
அந்தப் பனியில்
தோய்ந்து சிரிக்கும்
சீமைக் கதியாலின்
ரோஸ் நிறப் பூக்களின்
மங்கலான வடிவமும்
என் மனதில் மெல்லிய
சலனத்தை ஏற்படுத்தும்.

அடுப்பங்கரைப் புகையில்
அவிந்த கண்களில் நீர்துளி கோரும்,
பகல் இயந்திரமான உடம்பு
ஒரு தனிமையான சிட்டுக் குருவி போல்
குளிரில் படபடக்கும்.
பின்புறமிருந்து பால் மணம் மாறாத
கன்றுக் குட்டி
தோளோடு தோள் உரசும்,
தன் கனிவான கண்களால்
ஒருவிதமான நேசத்துடன்
என்னை நோக்கும்.

அந்தப் பார்வையின் ஈரம்
எனக்கு எதையோ
நினைவு படுத்துமாற் போல். . .
மடியில் உதிர்ந்து கிடக்கும்
பனி தோய்ந்த ரோஸ் நிறப் பூக்களை
வருடுகையில்
ஒருவகையான மென்மையான நினைவுகள்
பசுந்திரையிடும்.

உள்ளிருந்து கேட்கும்
கர்ண கொடூரமான குறட்டைஒலி
அந்த நினைவுகளை அறுத்தெறிவது போல்
தாளலயமில்லாமல் ஒருவித யந்திரமாய்
வீட்டினுள் பாவும்,
ஒரு நிம்மதியற்ற சோகம்
மீண்டும் நெஞ்சில் இடம் பிடிக்கும்.

**ஆகர்ஷ்யா.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த தலையங்கத்தை எழுதுகையில் மார்ச் நிதானமாகக் கடந்து ஏப்ரல் காலாவதியாகிக் கொண்டிக்கிருக்கிறது. இருந்தாலும் பெண்கள் தினமான மார்ச் 8 பற்றிக் குறிப்பிடுவதன் தேவை இல்லாமல் போகவில்லை என உணர்வதால் அது பற்றி கொஞ்சம். .

உலகளாவிய அளவில் ஆணாதிக்கத்தினதும் மூலதனத்தினதும் ஒடுக்குதலுக்குள்ளாகி அவற்றிற்கு எதிராக போராடிய பெண்கள் 1911ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதியை சர்வதேச பெண்கள் தினமாகப் பிரேரித்தார்கள். அன்று முதல் இன்றுவரை இந்த நாள் பெண்கள் தினமாக சர்வதேச அளவில் கொண்டாடப் படுகிறது. பலதரப்பட்ட பெண்கள் இயக்கங்கள், தொழிற்சங்கங்கள், ஏன் முதலாளித்துவ அரசு கூட இந்நாளை கொண்டாடவே செய்கின்றன. ஆனால் . . . . ஒடுக்கப்படும் பெண்களின் அழுகை ஒலி இவர்களின் கொண்டாட்ட மகிழ்ச்சி ஆரவாரத்தில் அமுங்கிப் போவதுதான் நிகழ்ந்து விடுகிறது.

பெண்கள் தினம் வெறுமனே ஒரு கொண்டாட்ட தினமாக அனுஷ்டிக்கப்படுவதற்காக பிரேரிக்கப்பட்டதல்ல. ஆணாதிக்கத்தினதும் மூலதனத்தினதும் அழிவை பிரகடனப்படுத்தவும், ஒடுங்கு முறைகளுக்கு எதிராக போர் பிரகடனம் செய்யவும் , விடுதலைப் பாதையில் பெண்கள் அணி திரண்டு முன்னேறவும், அடிமை விலங்குகளை உடைத் தெறியவும் போராடிய வீராங்கனைகளை நினைவு கூருமுகமாகவே பிரேரிக்கபட்டது எனலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய ரீதியாகவும், வர்க்க ரீதியாகவும் எமது உரிமைகளை இழந்து நிற்கும் நாம் பெண்கள் என்ற வகையில் நமது சமூகத்தாலேயே அடிமைகளாக்கப்பட்டு இருக்கிறோம். இந்நிலையில் உலகளாவிய அளவில் ஒடுக்கப்பட்டிருக்கும் பெண்களின் உரிமைகளோடும், அவர்களது போராட்டத்தோடும் எமது உரிமைகளையும், எமது போராட்டத்தையும் இனங் காண்கிறோம்.

சர்வதேச ரீதியாக பெண்கள் நடத்தும் ஒவ்வொரு உரிமை போராட்டமும் நமது உரிமை போராட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது. சர்வதேச அளவில் பெண்கள் வென்றெடுக்கும் ஒவ்வொரு உரிமையும் நமக்கான உரிமையயாக இருக்கிறது.

ஈழவிடுதலை போராட்டமும், வர்க்கப்புரட்சியும் நமது தேசிய, வர்க்க உரிமைகளை மீட்டெடுக்கலாம். ஆனால் எமது சமூக அவலங்களை அழிப்பதற்கான ஆற்றல் அவற்றிற்கில்லை. அது பெண்கள் எமது தனித்துவமான போராட்டத்தினூடாகவே சாதிக்கப் படுவதாக இருக்கும். தேசிய, வர்க்கப் போராட்டத்தோடு பெண்கள் உரிமைகளை மீட்டெடுக்கும் போராட்டத்தையும் இணைத்தெடுப்போம். அதன் மூலம் எமது தேசிய வர்க்க கடமைகளை மாத்திரமன்று பெண்களாய் அடையாளம் பெற்றதன் மூலம் ஒடுக்கப்படுவதற்கு எதிரான எமது கடமைகளையும் நிறைவேற்றுவோம். இதுவே நமது சர்வதேசக் கடமை.

ஆணாதிக்கத்திற்கும், மூலதனத்திற்கும், பாசிச போக்குகளுக்கும் எதிராக உறுதியான

போராட்டத்தை முன்னெடுப்போம் !

ஒடுக்கப்பட்ட பால் இனத்தை சேர்ந்தவர்களான பெண்களாகிய நாம் பெண் விடுதலைக்கான எமது தனித்துவான போராட்டத்தின் மூலம் எமது தேசத்தை அடிமை தளைகளற்ற தேசமாக்குவோம் !!

சர்வதேச பெண்களுடன் இரு கரம் இணைந்து உலகளவில் பெண்களின் உரிமைகளை வென்றெடுப்போம்!!!

[redacted]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண் மீதான சமூகத் தீர்ப்புக்கள்.

## ராஜினி

பெண்ணின் சமூக வாழ்க்கையானது அவளது சொந்த உணர்வுகளின், விருப்பங்களின், நலன்களின் அடிப்படையிலான முடிவுகளின் படி ஆனதல்ல. அது சமூகத்தின் விருப்பங்களுக்கு அதன் நலன்களுக்கு ஏற்ற விதத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த சமூக விருப்பங்கள், நலன்கள் என்பவை ஆணின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட ஆணாதிக்க சமூக நலன்களாகும். ஆணாதிக்க சமூகமானது பெண்ணை தனக்கு சொந்தமான ஒரு உடமைப் பொருளாகவே பார்க்கிறது. ஆணுக்கு சமமான மனித ஜீவனாக பெண்ணைப் பார்க்க இந்த சமூகம் ஒரு போதும் விரும்புவதில்லை. விரும்புவது என்பதைவிட அதனால் முடியாததும் கூட. பெண்ணை தனது பண்டமாகத்தான் அதனால் உணர முடியும். பெண் எனும் இப் பண்டம் எப்படி வாழ வேண்டும் என்பதை ஆணாதிக்க சமூகமானது ஏற்கனவே தீர்மானித்து வைத்திருக்கிறது. பெண்ணின் ஒவ்வொரு சமூகச் செயற்பாடும், ஒவ்வொரு நடவடிக்கையும் அமைய வேண்டிய விதத்தை ஒரு கருத்தியலாகவே உருவாக்கியுள்ளது. பெண்ணை அடிமைப்படுத்தி தனது ஆதிக்க சிறைக்குள் வைத்திருப்பதில் பேராசை கொண்ட அது அவளது உயிரியல் செயற்பாடுகள் கூட தனது விருப்பத்திற்கு , நலன்களுக்கு ஏற்ப நடை பெற வேண்டும் என விரும்புகிறது. அதனால் அது பெண்ணின் உயிரியல் செயற்பாடுகள் அமைய வேண்டிய விதத்தையும் தனது சமூக கருத்தியலுக்குள் உள்ளடக்கியுள்ளது. ஆணாதிக்க சமூகம் பெண்ணின் உயிரியல் செயற்பாடுகளில் தலையீடு செய்திருக்கும் சில வடிவங்களை இக் கட்டுரை விளக்க முயற்சிக்கிறது.

பெண் என்பவள் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளி வந்தவுடன் சமூகத்தின் கருத்தியல் கூண்டிற்குள் தான் நேராக நுழைக்கப்படுகிறாள். அவளது சமூகச் செயற்பாடுகள் மாத்திரமன்று உயிரியல் செயற்பாடுகளுமே ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ள சமூக விதிமுறைகளின் படியே நடை பெற வேண்டும். பெண் குழந்தை ஒன்று அது வளரும் போதே தன்னைப் பெண்ணாக உணர்த்தப்பட்டு வளர்க்கப்படுகிறாள். சமூகத்தால் கூறப்பட்டிருக்கும் பெண்ணிற்குரிய உடலியலியல் - உளவியல் வளர்ச்சி அதற்கு ஏற்பட்டிருக்கிறதோ இல்லையா என்பதை சமூகமானது கூர்மையானது கண்காணித்து வருகிறது. 12- 15 வயதுக்குள் அவள் குழந்தைகளை உற்பத்தி செய்வதற்கான உடலியல் வளர்ச்சியை பெற்றுவிட வேண்டும். இந்த வயதிற்குள் அவளுக்கு மாதவிடாய் வெளிப்படுவதை எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். மாதவிடாய் வந்ததும் உடனே ஊர் முழுவதும் செய்தி சொல்லப்பட்டு அந்த விடயத்தை உற்சவமாகக் கொண்டாடுகின்றனர்.

பெண்ணின் மாதவிடாய் நிகழ்வை ஊர் முழுவதும் சேர்ந்து கொண்டாடுவதன் காரணம், ஆணாதிக்க சமூகத்திற்கான வாரிசுகளை மறு உற்பத்தி செய்வதற்கு ஒரு பெண் உடலியல் ரீதியாக தயாராகி விட்டாள் என்பதனாலாகும். குறிப்பிட்ட வயதெல்லைக்குள் அவளுக்கு மாதவிடாய் வெளிப்படவில்லையானால் அவள் அனைவரதும் கேள்விகளுக்குள்ளாகிறாள். மாதவிடாய் தாமதமாகத் தாமதமாக சமூகத்தின் கேள்விகளும், ஏளனப் பார்வைகளும் அதிகரித்துச் செல்லும். குறிப்பிட்ட வயதெல்லைகளைக் கடந்த பின் அவளுக்கு மாதவிடாய் வெளிப்படுமாயின் ' நாட்ச் சென்று சாமத்தியப் பட்டவள் ' எனும் ஒரு இழுக்கான பெயர் வாழ்நாள் முழுவதும் அவளைத் தொடரவே செய்யும். குறிப்பிட்ட வயதுகளுக்கு முன் அவளுக்கு மாதவிடாய் வெளிப்படுமாயின் அவள் ஒரு விநோத பிறவியாக அனைவராலும் பார்க்கப் படுவாள்.

மனித மறு உற்பத்திக்கு உளவியல் ரீதியாக தயாராகு முன் உடலியல் ரீதியாக தயாராகி விட்ட அவள் நிலை இந்த சமூகத்திற்கு விநோதமாயன்றி வேறெப்படி இருக்கும்? ஒரு பெண்ணின் மாதவிடாய் விவகாரமானது அவளது உடலியற் கூறுகளின் செயற்பாடாக பார்க்கப் படாமல் அவளது சமூக செயற்பாடாகவே பார்க்கப் படுகிறது.

ஒரு பெண்ணிற்கு மாதவிடாய் வெளிப்படவேயில்லை- அவளது உடலியற் கூறுகளின் செயற்பாடானது அதற்கான வாய்ப்புக்களைக் கொண்டில்லை - என்றால் சமூகத்தில் அவளது பெயர் ' இருடி ' ( இருளி ) சமூகத்தில் பெண்ணாய் வாழ்வதற்கான தகுதியை இழந்து விட்டவள். ஆணிற்கான வாரிசுகளை உற்பத்தி செய்வதற்கான உடலியல் தகுதி இல்லாதவள். அதனால் ஆணுடனான அவளது திருமண உறவு மறுக்கப் படுகிறது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆணாதிக்க பூர்சுவா வர்க்க சமூகத்தில் 'பாலியல்' என்பது மனிதரின் அகவயப்பட்ட பசி, தாகம், நித்திரை போன்ற ஒரு உணர்வாக அல்லாமல் சமூக ஒழுக்க நெறியுடன் தொடர்புபட்ட ஒன்றாகவே கணிக்கப்படுகிறது.

இதன் மூலம் மனிதரை அவர்களின் அகரீதியான உணர்வுகளிலிருந்து அந்நியப்படுத்துகிறது. ஒவ்வொரு மனிதரும் பாலியல் என்பதை தனது அகரீதியான ஒரு உணர்வாக - தனக்குள் இயற்கையாக உருவாகும் ஒன்றாக அல்லாமல் அதை தனக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே உணர்கிறார். தமது பாலியல் விவகாரங்களை சமூகமே தீர்மானிப்பதைக் காணும் மனிதர்கள் பாலியல் என்பது சமூகத்தால் தனக்குக் கிடைக்கும் ஒன்றாகவே உணர்கிறார். அது பாலியல் - சமூகத்துடன் தொடர்பு பட்டதாகவே மனிதர்களுக்குக் காட்டப்பட்டிருப்பதால் , சமூகமே அதை தீர்மானிப்பதால் பாலியல் பற்றிய மனித உணர்வு/ நடவடிக்கை சமூகத்தின் ஒழுக்க நெறிகளுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. சுருங்கக் கூறின் ஆணாதிக்க சமூகத்தில் பாலியல் என்பது மனித உயிரியல் சார்ந்த ஒன்றாக அல்லாமல் சமூகம் சார்ந்த ஒன்றாகவே இருக்கிறது. சமூகம் சார்ந்த பாலியல் ஒழுக்க நெறிகள் ஆணுக்கு ஒருவிதமாகவும் பெண்ணுக்கு ஒருவிதமாகவும் இருக்கிறது.

ஆணாதிக்க சமூகத்தில் பாலியல் என்பது ஆணை மையப்படுத்தியே தீர்மானிக்கப் படுகிறது. ' பாலியல் இன்பம் அநுபவித்தல் ' என்பது ஆணுக்கு மாத்திரமானதே. பெண்ணுக்கு அல்ல. பெண்ணைப் பொறுத்தவரையில் ' பாலியல் இன்பம் ' என்பது சமூகத்தால் அவளுக்கு மறுக்கபபட்ட ஒன்று.

பாலியல் ஆர்வங் கொள்வதோ, அதைப் பற்றி கதைப்பதோ, பாலியலில் ஈடுபடுவதோ ஒழுக்கக் கேடானது என சமூகம் பெண்ணுக்கு தடை விதித்துள்ளது.
திருமண உறவுக்குள்ளும் பெண்ணின் பாலியல் நடவடிக்கை என்பது ஆணை சார்ந்தே - அவனது இன்பத்தை முதன்மைப் படுத்தியும் குழந்தை உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு இருப்பதால் பெண்ணின் பாலியல் தேவையை தீர்ப்பதற்கான ஒரு வழிமுறையாக திருமணம் இருப்பதாக அர்த்தப்படாது. பாலியல் ஒழுக்க நெறிகளை ஆணாதிக்க சமூகம் உருவாக்கியதே பெண்ணின் பாலியல் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காகத்தான். இதன் காரணம் ஒரு தார மணத்தை பெண் கடைப் பிடித்து ஆணின் வாரிசுகளை நிச்சயப் படுத்த வேண்டும் என்பதுதான். ஒரு தார மணத்தின் அடிப்படையே குழந்தை உற்பத்தியாய் இருக்கையில் ஆணாதிக்க சமூக திருமணம் பெண்ணின் பாலியல் தேவைகளை பூர்த்தி செய்வதற்கானது என்பது சுத்த அபத்தமாகும். ஆணாதிக்க சமூகத்தை பொறுத்தவரையில் ' பாலியல் தேவை ' என்பது பெண்ணுக்கு இல்லாத ஒன்று.
ஆனால் ஆணைப் பொறுத்தவரையில், பாலியல் என்பது ஆணை மையப்படுத்தியே தீர்மானிக்கப்படுவதால் பாலியல் பற்றிய சமூக ஒழுக்க நெறியானது பெண்ணின் பாலியலை மறுக்கும் ஒன்றேயன்றி ஆணுக்கானது அல்ல. ஆணைப் பொறுத்தவரையில் , பாலியல் இன்பத்தை அநுபவிப்பதற்கான அவனது சுதந்திரமானது தனக்கு சமூகத்தால் தரப்பட்ட அனுமதியாகவே கருதுகிறான். அதற்குக் காரணம் தான் 'ஆண் ' என்பதாகும். தான் ஆணாயிருப்பதே பாலியல் நடவடிக்கைக்கான அதிபதியாக - விரும்பும் போது அநுபவிக்கவும், விரும்பாதபோது தவிர்க்கவும் - தன்னை ஆக்கியுள்ளது என உணர்கிறான்.

அதற்குக் காரணம் தான் ' ஆண் ' என்பதாகும். தான் ஆணாயிருப்பதே பாலியல் நடவடிக்கைக்கான அதிபதியாக - விரும்பும் போது அநுபவிக்கவும் , விரும்பாதபோது தவிர்க்கவும் தன்னை ஆக்கியுள்ளது என உணர்கிறான். சமூகமானது அவனை அப்படி உணரச் செய்கிறது ஆண் என்றால் பாலியல் பாலியல் என்றால் ஆண் என்பதே ஆணாதிக்க சமூகத்தில் பாலியல் பற்றிய சமூகத் தீர்ப்பு. திருமணம் என்பது ஆணுக்கு பாலியல் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஓர் வழிமுறையல்ல. தனது வாரிசுகளை உற்பத்தி செய்வதற்கான வழி முறை மாத்திரமே திருமணத்தில் தான் அவன் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் எனும் சமூகக் கோட்டுபாடு அவனுக்கு இல்லை. ' ஒருவனுக்கு ஒருத்தி' 'கற்பொழுக்கம்' எனும் பாலியல் கட்டுப்பாடுகள் ஆணுக்கில்லாததால் ஆண் திருமண உறவுக்குப் புறம்பான -மனைவி தவிர்ந்த வேறு பெண்களுடனும் - பாலியல் உறவுகளில் ஈடுபட உரிமையுடையவன். ஆணாதிக்க சமூகத்தை பொறுத்தவரையில் பாலியல் தேவைக்காக திருமணம் என்பது உண்மையில் ஆணுக்குமில்லை பெண்ணுக்குமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருமணம் என்பது பெண்களைப் பொறுத்தவரையில் ஆணாதிக்க சமூகத்திற்கு ஆணின் வாரிசுகளை உற்பத்தி செய்வதற்கன்றி வேறல்ல. குழந்தை உற்பத்திக்கு உடலியல் ரீதியாக தகுதியற்றவள் என ஒரு பெண் கருதப்படுவாளானால், அவள் திருமண உறவிற்கு, ஆணுடன் வாழ்வதற்கு தகுதியற்றவளாகத் தீர்மானிக்கப்படுகிறாள். இதன் மூலம் அவள் 'பெண்' எனும் சமூக அந்தஸ்த்தை இழந்து ஏளனத்திற்குரிய ஜந்துவாக ஒடுக்கப்படுகிறாள். அவளது இருத்தலால் சமூகத்திற்கு எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை. சமூகமானது அவளை எப்படியாவது தன்னிடமிருந்து அகற்றப் பார்க்கிறது. பலவிதமான அவதூறுகளை, அவமான வார்த்தைகளை அவள் மீது அள்ளி வீசுகிறது. இதுவே மாதவிடாய் வெளிப்படாத பெண்ணின் சமூக நிலையாகும்.

பெண் உடற் கூறுகள் முழுமையாக வளர்ச்சியடையாமல் பிறக்கும் - பெண்ணாய் அடையாளம் காணப்பட்ட - பெண்களின் நிலையும் இத்தகையதே. இவர்கள் 'அலி' என்று அடையாளப் பெயரிடப்பட்டு மனிதர்களுக்குக் கீழானவர்களாக கணிக்கப்படுகிறார்கள். ஆணாதிக்க சமூகத்தில் மனிதர்கள் அவர்களின் பால் அடையாளங்களுக் கூடாகவே இனங் காணப்படுவதால் ஒன்று அவர்கள் ஆணாய் அல்லது பெண்ணாய்த் தான் இருக்க வேண்டும். இந்த இரு நிலைகளுக்கு இடைப்பட்ட நிலையில் இருப்பவர்கள் - இரு நிலைகளினதும் குறைவளர்ச்சியை தமக்குள் கொண்டிருப்பவர்கள் மனிதர்களாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டார்கள். ஆண் / பெண் என்று பிரிக்கப்பட்டு சீராக இயங்கும் சமூகத்தில் இடைஞ்சலை ஏற்படுத்தும் ஜந்துகளாகவே கணிக்கப்படுகிறாள்கள்.

பெண்ணின் திருமணம் என்பது இன்னொரு சர்ச்சைக்குரிய விடயம். குறிக்கப்பட்ட திருமண வயதைக் கடக்கு முன் பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கப் படவில்லையானால் சமூகத்தில் அது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகி விடுகிறது. ' ஏன் இன்னும் திருமணம் செய்யவில்லை' எனும் கேள்வி பெண்ணைப் பார்த்து எழும். உண்மையில் இந்தக் கேள்விகள் திருமணமாகாத பெண்ணின் மீதான அக்கறையினாலா கேட்கப் படுகின்றன? இல்லை பெண்கள் தமது உடல் இளமையின் உச்சத்தில் ' இளமை பூரிக்கும் ' காலத்தில் திருமணம் செய்து வைக்கப்பட வேண்டும் என்பது சமூகத்தின் தீர்ப்பு. குழந்தைகளைப் பெறுவதற்கான உடற் தைரியமும், கருத்தரிப்பதற்கான வீரியமும் கொண்ட பருவமாக இது கருதப் படுகிறது. இந்த வயதைக் கடக்க கடக்க பெண்ணின் இளமை கருத்தரிக்கும் வீரியம், பிள்ளை பெறுவதற்கான உடற் தைரியம், ஆணின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் ஆகியவை குறைந்து செல்லும் ; இளம் வயதிலேயே பெண்களால் ஆரோக்கியமான குழந்தைகளைப் பிரசவிக்க முடியும்; ஆணின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உள- உடல் ஆற்றல் இருக்கும் என்பதே சமூகத்தின் கணிப்பு. பெண்ணின் இளமை என்பது அவளது வயதோடு சம்பந்தப்பட்ட ஒரு விடயமாகவே வலியுறுத்தப்படுகிறது. இளமை கடந்த பின் பெண் பாலியல் விவகாரங்களைப் பற்றி நினைத்துப் பார்க்கவும் கூடாது. அதற்கு அவளுக்கு உரிமை இல்லை. பொதுவாகவே ஆணாதிக்க சமூகத்தில் பெண்களுக்கு பாலியல் விவகாரம் தடை செய்யப்பட்டிருக்கையில் , குழந்தை பெறும் ஆற்றல் மழுங்கிப் போனவள் என சமூகம் கருதும் - சமூகம் இளமை எனக் கணிப்பிட்டிருக்கும் வயதெல்லையைக் கடந்த பின் பெண் பாலியலில் ஈடுபடுவதை சமூகம் எப்படி அனுமதிக்கும் ? இதனாலேயே இளமை கடந்த பெண்களின் திருமணம் என்பது சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வயது சென்ற பின் பெண்ணால் ஆரோக்கியமான குழந்தைகளை உற்பத்தி செய்ய முடியாதா ?

தனது கருவள காலம் முழுவதும் பெண்ணால் குழந்தைகளை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் ஆணுடன் திருமண உறவில் ஈடுபடும் பெண் ஆணுக்காவும் அவனது குழந்தைகளுக்காகவுமே வாழ வேண்டியவளாக இருக்கிறாள். அவர்களுக்காக உழைக்க நிர்ப்பந்திக்கப் படுகிறாள். குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் - கணவன், குழந்தைகள் (இதில் ஆண் குழந்தைகள் முன்னுரிமை பெறுவார்கள் ) எடுத்துக் கொள்ளும் சலுகைகளில் எதுவும் பெண்ணுக்கு இல்லை. உணவு, உடை மருந்து ஏனைய சௌகரியங்கள் அனைத்திலும் ஆணும் அவனது வாரிசுகளுமே முன்னுரிமை பெறுகின்றனர். அடுப்படி வேலையிலும், சுத்தப்படுத்துதல், தோய்த்தல் வேலைகளிலும், கணவனதும் குழந்தைகளினதும் சௌகரியத்தைக் கவனிப்பதிலுமே முழுதாக ஈடுபடும் பெண் நேரத்திற்கு உணவின்மையினாலும், தனது உடல் நலத்தினைக் கவனிப்பதில் தானே அக்கறை செலுத்த முடியாது வேலைகளில் மூழ்கி இருப்பதனாலும், தொடர்ச்சியாக குழந்தைகளைப் பெறுவதாலும் பலவீனமுற்றவளாயும், நோயாளியாயும் மாறுகிறாள். திருமணமான 5- 6 வருடங்களுக்குள்ளேயே அநேகமான பெண்கள் நோயாளிகளாகவும், பலவீனமுற்றவர்களாகவும் மாறுவது இதனாலாகும். இத்தகைய பெண் தான் வயிற்றில் சுமக்கும் குழந்தைக்கு எங்ஙனம் போதிய போசாக்கை வழங்க முடியும் ? திருமண வாழ்வில் பெண் பிரசவிக்கும் குழந்தைகளில் முதல் பிறப்பவற்றை விட கடைசியாக பிறக்கும் குழந்தைகள் ஆரோக்கியமற்று இருப்பதன் காரணம் இதுவே. பெண்ணின் வயதிற்கு அவள் ஆரோக்கியமான குழந்தைகளைப் பிரசவிப்பதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. உடற் பலமும் போசாக்கும் நிரம்பிய பெண், குடும்ப நல ஆலோசனைகளுக்கு அமைய கால இடைவெளிவிட்டு பிரசவிக்கும் - தனது உடல் நலனைப் பேணும் பெண், மாதவிடாய் வெளிப்படுவது முடிவுறும் காலம் எனக் கருதப்படும் 45- 50 வயதுகளின் பின்னும் ஆரோக்கியமான குழந்தைகளைப் பிரசவிக்க முடியும். மாதவிடாய் நின்று போவதுடன் , பெண் கர்ப்பம் அடைதும் நின்று போகும் என்றே இதுவரையும் கருதப்பட்டு வந்தது. ஆனால் மாதவிடாய் தடைப்பட்ட பின்னும் ஹோர்மோன் சுரப்பிகளை இயங்கச் செய்வதன் மூலம் கர்ப்பம் அடையச் செய்ய முடியும் என நவீன விஞ்ஞானம் நிரூபித்துள்ளது.

" பெண் ஆணுடன் இணையும் போதே அவளது பிறவி முழுமை அடைகிறது " என்பது ஆணாதிக்க சமூகம் ஏற்படுத்தியிருக்கும் மாயை.
" ஆணின் துணையில்லாமல் பெண் வாழ முடியாது அவளது வயோதிப காலத்தில் கணவனும் அவனது பிள்ளைகளுமே அவளுக்குப் பாதுகாப்பு வழங்குவர் அவர்களது துணை இல்லாவிடில் அவள் அநாதையாக இறக்க நேரும் " எனும் அச்சத்தை சமூகமானது ஏற்படுத்தியிருக்கிறது.

பூர்சுவா சமூகத்தைப் பொறுத்தவரையில் எந்த மனிதருக்கும் சமூக ரீதியான பாதுகாப்பு கிடையாது. ஒவ்வொரு தனி மனிதரும் மற்றவரிலிருந்து அந்நியப்பட்டு - தான்- தனக்கு - எனும் நிலையிலேயே வாழ வேண்டியுள்ளது. சுரண்டலையும் அந்நியமாதலையும் பண்பாய்க் கொண்ட பூர்சுவா சமூகத்தில் தாய், பிள்ளை, கணவன், மனைவி அனைத்து உறவுகளுமே பொருளாதாரப் பிணைப்பாகத்தான் இருக்கின்றன. பாசம், அன்பு அனைத்தையும் பணம் தீர்மானிக்கும் சமூகத்தில் பராமரிப்பு என்பதையும் பணம்தான் தீர்மானிக்கிறது. பென்ஷன் கிடைக்கும் தந்தை , வேலை செய்யும் சக்தியுள்ள தாய் இவர்களது சேவை குடும்பத்தில் இருப்பதால் இவர்களைப் பராமரிப்பதில் பிள்ளைகள் ஆர்வம் காட்டுகின்றனர். வருவாயில்லாத நோயாளித் தாய் தந்தையரைப் பராமரிக்க எந்தப் பிள்ளைகளும் விரும்புவதில்லை. அவர்களுக்கு அவர்களது பெற்றோர் மேலதிக சுமையாகவே இருக்கின்றனர். பணக்கார குடும்பங்களில் முதியோர் தாமகவோ அல்லது பிள்ளைகளின் மூலமாகவோ தம்மைப் பராமரிக்க சேவகர்களை அமர்த்திக் கொள்கிறார்கள். ஆனால் ஏழைக் குடும்பங்களின் முதியோர் மிகவும் பரிதாபகரமான வாழ்க்கையை வாழ நேர்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

' முதியோர் பராமரிப்பு ' என்பது சமூகப் பொறுப்புணர்வுடன் தொடர்பு பட்டது. முதியோரை பராமரிக்கும் கடமை சமூகத்தை - அரசையே சார்ந்தது. தனது இளைய தலைமுறையின் நலன்களையே புறக்கணிக்கும் பூர்சுவா சமூக அரசு தன்னால் சுரண்டப் பட்டு மேலும் சுரண்ட வழியற்றுப் போன வயோதிப மனிதர்களின் நலன்களையா கவனத்திற்கு எடுக்கும் ? பூர்சுவா வர்க்க அரசைப் பொறுத்தரையில் இந்த வயோதிபர்கள் எவ்வளவு விரைவில் செத்து மடிகிறார்களோ அவ்வளவு விரைவில் ஒழிவதே நன்மை எனக் கருதுகிறது. பூர்சுவா சமூகமும் அதன் அரசும் முதியோர் நலன்களைப் புறக்கணித்து அர்களை ஒரு சுமையாகக் கருதும் போது தனிமனிதர்களிடம் எப்படி இவர்களின் மீதான பொறுப்புணர்வு காணப்படும் ? பூர்சுவா சமூகத்தில் பிள்ளைகளுக்கு பெற்றோர் சுமையானவர்களே. சமூக ரீதியா முதியோரின் நிலை இவ்வாறிருக்கையில் ' பெண்ணின் வயோதிப காலத்தில் அவளைப் பராமரிக்க பிள்ளைகள் தேவை என்பது சுத்த ஏமாற்றாகும்'.

சமூகம் விதித்திருக்கும் குறிப்பிட்ட வயதுகளுக்குள் பெண்கள் திருமணம் செய்து கொள்ளாவிடில் சமூகத்திற்கு அதுவும் ஒரு ஏளனமே. ஒரு பெண் திருமணம் செய்யாமலிருக்கிறாள் என்றால் அதற்குப் பல காரணங்கள் உண்டு. சீதனம் என்பது இன்று பிரதான காரணமாயுள்ளது. யாழ்ப்பாண மத்திய தர வர்க்கப் பெண்களில் பலர் 35 வயதுகளைக் கடந்து திருமணம் செய்து கொள்ள முடியாமலிருக்கிறார்கள் என்றால் அதன் காரணம் சீதனமே. சீதனம் எனும் மலத்தை தனக்குள் வைத்துக் கொண்டிருப்பதற்காக ஒரு போதும் அவமானப்படாத சமூகம் பெண்கள் குறிப்பிட்ட வயதில் திருமணம் செய்யாமலிருப்பதைத் தான் ஏளனமாய் பார்க்கிறது. இதானல் பெண்கள் தமது திருமணம் பற்றி குறிப்பிட்ட வயதுகளில் கூடுதலாக கவலை கொள்ள நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள். திருமண வயது அதிகரிக் அதிகரிக்க சமூகம் தம்மை தூற்றப் போகிறதே எனும் கவலையாலும், சமூகம் கற்பித்திருக்கும் எதிர்காலம் பற்றிய அச்சம் காரணமாகவும் அவர்கள் உருக்குலையும் நிலை ஏற்படுகிறது. ஆனால் சமூகமோ ' திருமணம் பற்றிய கவலையில் அவர்கள் உடல் மெலிவதாக ' அதையும் ஒரு ஏளனத்திற்குரிய விடயமாக்குகிறது.

35- 40 வயதுகளைக் கடந்த பின்னும் பெண் திருமணம் செய்யவில்லையானால் சமூகத்தில் அவளது 'மூளி ' ( மூலி) . அவளது முகத்தில் விழிப்பதே அபசகுனம். அவள் மூதேவித்தனம் நிரம்பியவள். இதற்கு ' ஸ்திரி ' எனும் சிங்களப் படத்தில் ஒரு சிறந்த உதாரணம் காட்டப் படுகிறது. : திருமணம் செய்து கொள்ளாத வயோதிபமாதான மெசி நோனா தனது தம்பியின் வீட்டிற்கு செல்கிறாள். மறுநாள் தனது மகனுக்காக அவன் நடத்தப் போகும் ஹிரி அம்மா ஹே தான விற்கு ( சிறுவர்களுக்கான நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற திருமணமான பெண்களை அழைத்து வேதம் ஒதி பால் சோறு வழங்குதல்) மெசி நோனாவை வரும்படி தம்பி சொல்லுகிறான். உடனே தம்பியின் மனைவி இடையிட்டு " ஏன் அக்கா இவ்வளவு தூரம் இதற்காக வரவேண்டும் ? பால் சோற்றை நீங்களே கொண்டு போய் குடுத்து விட்டு வருங்கள் " என்கிறாள். வீடு திரும்பும் வழியில் மெசி நோனா தனது மாட்டிடம் சொல்கிறாள் , "ஹிரி அம்மாஹே தானவிற்கு திருமணமாகாத பெண்கள் போகக் கூடாது என்பது எனக்குத் தெரியாதா ? திருமணம் ஆகாத பெண் மூதேவித்தனமானவள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். . ." இத்தகைய உணர்வு சிங்கள மக்கள் மத்தியிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது.

திருமணத்தின் பின் தான் ஒரு குழந்தையைப் பெற வேண்டும் என்பதில் பெண் ஆர்வமாக இருக்கிறாள். ஆர்வம் என்பதைவிட நிர்ப்பந்திக்கப்படுகிறாள். திமணமாகி 6 மாதத்திற்குள்ளேயே அவளிடம் பிள்ளையைப் பற்றி சமூகம் விசாரிக்கத் தொடங்கி விடுகிறது. நாட்கள் செல்ல செல்ல குழந்தை பற்றிய கேள்விகளும் சமூகத்திடமிருந்து அதிகரிக்கிறது. இந்தப் பெண்ணை பற்றிய கிசுகிசுப்புக்களும் பரவத் தொடங்கி விடுகிறது. சமூகத்தின் தூற்றுதல்களுக்குப் பயந்தும், அவற்றால் மனம் நொந்தும் பெண் தனக்குள் மருகுகிறாள். தனக்காக இல்லாவிடினும் சமூகத்தின் வாயை அடைப்பதற்காக ஒரு பிள்ளையை பெற வேண்டும் என்பதில் கருத்தாயிருக்கிறாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல தெய்வங்களிடம் விண்ணப்பிக்கிறாள். பல வைத்தியங்களை செய்கிறாள். இப்படியாக அவள் தனக்கொரு பிள்ளையை பெற முயற்சிக்கிறாள். அதை விட குழந்தை பெறாத தன்னைக் கணவன் துரத்தி விட்டு வேறு பெண்ணை மனம் முடிப்பான் , இதனால் தனது பொருளாதார தேவைகளுக்கு கணவனையே சார்ந்து நிற்கும் தான் அநாதரவான நிலைக்கு ஆளாக நேரிடும் எனும் அச்சமும் குழந்தை பெற்றுக் கொள்வதில் அவளை தீவிரம் காட்டச் செய்கிறது. திருமணமாகி குறிப்பிட்ட வருடங்களின் பின்னும் ஒரு பெண் கர்ப்பந்தரிக்காவிடில் சமூகத்தில் அவளது பெயர் ' மலடி' . ஆணாதிக்க சமூகத்திற்கு ஒரு குழந்தையைப் பெற்றுத்தர முயலாத அவள் இனி சமூகத்திற்குப் பிரயோசனமற்றவள். அவளது இருத்தல் சமூகத்தைப் பொறுத்தவரையில் வீணானதே. இத்தகைய ஒருத்தியை சமூகமானது ஒடுக்கி விடுகிறது. அவளது முகத்தில் விழிப்பதையே அபசகுனமாகப் பார்க்கிறது.

ஒரு பெண், குழந்தை பெறுவதா இல்லையா என்பது அவளது சொந்த விருப்பத்தில் எடுக்கப்படும் முடிவல்ல. அது அவளது கணவன், அவனது குடும்பத்தைச் சார்ந்த மூத்தோர், சமூகம் சார்ந்த ஒன்றாக உள்ளது. ஆணின் வாரிசுகளை சமூகத்திற்கு கொண்டு வரவேண்டிய கடமை பெண் மீது சுமத்தப்பட்டிருப்பதால் திருமணமான ஒவ்வொரு பெண்ணும் தனது கணவனிற்கான குழந்தைகளை பிரசவித்தே ஆக வேண்டும். அப்படி குழந்தை எதையும் பிரசவிக்காத பெண் தனது கணவனுடன் வாழ தகுதியற்றவள். அவளை துரத்தி விட்டு வேறு திருமணம் செய்து கொள்ள அக் கணவனுக்கு உரிமையுண்டு. உரிமை என்பதைவிட அதுவே நியதியாயுமுள்ளது. அவளை விவகாரத்துச் செய்ய ஆணுக்கு சட்டரீதியான உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. குழந்தை பெறுவதை நியதியாய்க் கொண்டு அவளது இடத்திற்கு இன்னுமொரு பெண் மனைவியாய் வருவாள். அவளால் குழந்தைகளை உற்பத்தி செய்ய முடிந்தால் மாத்திரமே அவளும் மனைவி என்ற அந்தஸ்தைப் பெறுவாள். இல்லாவிடில் அவளும் விவாகரத்துச் செய்யப்பட்டு. . . . .
இது தொடரும். ஆனால் ஆணின் குழந்தை பெறுவதற்கான தகுதி ஒரு போதும் சமூகத்தின் கேள்விக்குட் படுத்தப்பட மாட்டாது.
ஆணாதிக்க சமூகம் எப்படி தன்னைத் தான் கேள்விக்குட்படுத்த முடியும் ?
அது தன்னைக் குறையுடையதாக ஒரு போதும் காட்டிக் கொள்வதில்லை. ஆண், குழந்தை பெறுவதற்கான ஆற்றல் இல்லாதவனாக இருந்தாலும் அது சமூகத்தால் கண்டும் காணாது விடப்படும். அவனது குறைபாட்டின் காரணமாக ஆண் ஒருபோதும் சமூகத்தால் ஒதுக்கப் படுவதில்லை.

இங்கு நகைச்சுவையானதும் , முட்டாள்தனமானதும், அதேநேரம் பரிதாபகரமானதுமான விடயம் என்னவென்றால் குறிப்பிட்ட கணவன் மனைவியரில் ஆண் குழந்தை பெறுவதற்கான ஆற்றல் இல்லாதவனாக இருந்தாலும், அது சமூகத்திற்கு தெரிந்திருக்கும் நிலையிலும் பெண்ணே 'மலடி' என்று ஒதுக்கபட்டு அவமதிக்கப்படுகிறாள். அதே நேரம் அக் கணவனை விவகாரத்துச் செய்துவிட்டு வேறு ஒருவனை மணந்து கொள்ளவும் , குழந்தை உற்பத்தி செய்யவுமான உரிமைகள் எதுவும் சமூக ரீதியாகப் பெண்ணுக்குக் கிடையாது.

திருமண வாழ்வில் கணவனின் கொடுமைகளுக்குள்ளாகி இனி அவனுடன் வாழ முடியாது எனும் நிலையில் விவாகரத்துச் செய்து கொள்ள ஒரு பெண் முயல்கையில், அவளது குடும்பத்தினர், பெரியவர்கள் அதற்கு அவளை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். மாறாக பொறுத்துப் போகும்படியும் கணவனின் கொடுமையான நடத்தைக்கு அவளது தவறுகளும் காரணமாயிருக்கும், அதனால் அவள் மேலும், மேலும் கணவனுக்கு ஏற்றவாறு நடந்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றும் அறிவுரை கூறுவர். அவளது விவாகரித்து உரிமையை நிராகரிப்பர். இதையெல்லாம் மீறி ஒரு பெண் விவாகரத்துச் செய்து கொள்வாளானால் சமூகமானது அவளை 'வாழா வெட்டி' என பழி தூற்றி ஒதுக்குகிறது. ஆணுடன் வாழக் கிடைத்தும் அவனுடன் தொடர்ந்து வாழக் கொடுத்து வைக்காத துர்பாக்கியசாலியாக அவள் கருதப்படுகிறாள். ஆணுடன் வாழவும் அவனுக்கும் அவனது குழந்தைகளுக்குமான தனது சேவைகளை வழங்கவும் மறுத்த - ஆணாதிக்க குடும்ப அலகை சிதைத்த அவள் மிக மோசமாக சமூக ஒழுக்க விதிகளை மீறியிருக்கிறாள். இவளை சமூகம் இலகுவில் ஏற்றுக் கொள்ளாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருமணமான பெண் தனது கணவனுக்காக குழந்தைகளை உற்பத்தி செய்து, அவனுக்காகவும் அவனது வாரிசுகளுக்காகவும் உழைத்து, அவர்களுக்காக தனது உடற்சாற்றையெல்லாம் பிழிந்து முதுமையடைந்த பின் கணவனுக்கு முன்னதாக இறந்துவிட வேண்டும். இத்தகைய பெண்ணே தனது வாழ்வில் பூரணத்துவம் அடைந்தவளாவாள். இவளே ' தீர்க்க சுமங்கலி ' . தீர்க்க சுமங்கலியாய் வாழ்வதே சிறப்பான வாழ்க்கையென்று பெண்ணுக்கு சமூகத்தால் சொல்லப்பட்டிருப்பதால் ஒவ்வொரு பெண்ணும் அந்த நிலையையே விரும்புகிறாள்.

ஒருபெண் கணவனால் எத்தனை துன்பங்களையும் அநுபவிக்கலாம். அந்த வாழ்வே அவளுக்கு வெறுத்து விடலாம். ஆனாலும் அவள் கணவனோடு வாழ்வதே பெருமை என சமூகம் அவளுக்கு சொல்லியிருப்பதால் அவளும் அக் கொடுமைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு தான் தீர்க்க சுமங்கலியாய் போய்ச் சேரும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். இது எத்தனை பரிதாபகரமான நிலை ?
உண்மையில் 'தீர்க்க சுமங்கலி ' எனும் இப்பதமானது பெண்களை ' கணவனுக்கு முதல் இறந்துவிடு ' என்று சபிக்கும் ஒரு சொல்லன்றி வேறென்ன?
திருமண நேரத்தில், தாலி கட்டும் போது ' அபசகுனமான ' வார்த்தைகளோ, தும்மலோ, பல்லி சத்தமிடுவதோ கேட்டு விடக் கூடாது என்பதற்காக நாதஸ்வரம், மேளம் முழங்குவதாக சொல்லப்படுகிறது. ஆனால் மணப்பெண்ணை ' கணவனுக்கு முன் செத்துப் போ ' என்று சபித்து விட்டுப் செல்கிறார்கள். கணவனுக்கு முன் இறக்காத பெண் தீர்க்க சுமங்கலியாய் போய் சேராத பெண் சமூகத்திற்கு அபசகுனத்தைக் கொண்டு வருவதாய் சமூகம் கருதுகிறது.
அவளை விதவை என ஒதுக்கி வைக்கிறது. ' கணவனுக்காக வாழ்ந்து, அவனுக்கு முதல் இறக்க வேண்டும் ' . எத்தனை அநாகரிகமான காட்டுமிராண்டித்தனமான நிர்ப்பந்தங்களை ஆணாதிக்க சமூகம் பெண் மீது விதிக்கிறது ?

கணவன் இறந்த பின் பெண் உயிர்வாழ்வது என்பது ஆணாதிக் சமூகத்தைப் பொறுத்தவரையில் அவசியமற்ற ஒன்று.
பெண் வாழ்வது, திருமணம் மூலம் தன்னுடன் உறவை ஏற்படுத்திக் கொண்ட ஆணுக்காகவேயாகும். அந்த ஆணே இல்லாத போது அவள் மாத்திரம் ஏன் தொடர்ந்து வாழ வேண்டும் ?
இதனால் அவளை உடன்கட்டை ஏற்றிய ஆணாதிக்க சமூகம், இன்று தனது வசவுகளாலும், ஏளனங்களாலும் உடன்கட்டை ஏற - தற்கொலை செய்து கொள்ள நிர்ப்பந்திக்கிறது..
கணவனை இழந்த பெண்ணுக்கு உயிர் வாழ இந்த சமூகத்தில் அனுமதி கிடையாது.
ஆனால் ஆணைப் பொறுத்தவரையில் மறுமணம் என்பது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. மனைவி இறந்த சில நாட்களுக்குள்ளேயே மறுமணம் பற்றி அவனுக்கு உபதேசிக்கப்படும்.

உபதேசிப்பது மாத்திரமல்ல. அவன் மறுமணம் செய்து கொள்ள நிர்ப்பந்திக்கவும் படுகிறான். ஆணுக்கும் பெண்ணுக்கும் இரட்டைத் தீர்ப்புக்களைக் கொண்டிருக்கும் இந்த ஆணாதிக்க சமூகம் தான் எத்தனை சாதுரியமானது ?
தனது ஆணாதிக்க சமூக நலன்களை அது தான் எத்தனை கறாராக காப்பாற்றி வருகிறது ?

இருளி, மூலி, மலடி, வாழாவெட்டி, விதவை,. . . இவை பெண் மீதான ஆணாதிக்க சமூகத்தின் தீர்ப்புக்கள்.
இவற்றையெல்லாம் சுமந்து கொண்டு, இவை சரியானவை என தாமும் ஏற்றுக் கொண்டு, இவற்றிற்கு பணிந்து வாழ்வதே சமூகத்தில் பெண்களின் பரிதாப நிலையாயுள்ளது. இவற்றையெல்லாம் எதிர்த்துக் கொண்டு ஒரு பெண் வாழ முற்படுவாளானால் சமூகமானது அவளை ' நடத்தை கெட்டவள் ' என முத்திரை குத்தி விடுகிறது.
மிகச் சுலபமாக இந்தச் சொல்லை அவள் மீது பொறித்து அவளை சமூகத்திலிருந்து ஒதுக்கி விடுவதன் மூலம் ஏனைய பெண்களும் அவளை பின்பற்ற விடாமல் செய்வதில் ஆணாதிக் சமூகத்தை தவிர யாரால் முடியும் ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த ஆணாதிக்க அடக்குமுறைகளையெல்லாம் துச்சமாக தூக்கி எறிந்து விட்டு சுதந்திரமாய் வாழ முற்படும் பெண்களும் சமூகத்தில் உள்ளனர். திருமணம், குழந்தை உற்பத்தி, விவாகரத்து போன்றவற்றில் தமது சுதந்திரத்தை முதன்மைப் படுத்தும் இவர்கள் ஆணாதிக்க சமூகத்தின் ஒழுங்கைக் குலைப்பவர்களாக இருக்கிறார்கள்.
தனது நலன்களுக்கு எதிராய் செயற்படும் விழிப்புணர்வு பெற்ற இப் பெண்களின் மீது தூற்றுதல்களை தாராளமாக அள்ளி எறியவும் சமுதாயம் மறுபுறம் இவர்களைக் கண்டு அஞ்சவும் செய்கிறது.
இந்தப் பெண்களே ஆணாதிக்க சமூகத்தை அதன் இருட் சிறையிலிருந்து மீட்டுக் கொண்டு வருபவர்களாக இருக்கிறார்கள்.

## முடிவற்ற வாழ்வை நோக்கிய யாத்திரிகன்.

பிரஞ்சு மூலம்: சமிஹ் எல் காசிம்
தமிழில் : க. கலாமோகன்

உனக்கு தேசம் இல்லை, வீடு இல்லை
விரும்புவதற்கு ஒருத்தி இல்லை
இதற்குப் பிறகும் உனக்கு விளங்கவில்லையா ?
வீடு இல்லை
விரும்புவதற்கு ஒருத்தி இல்லை.
ஓ ! சுடலைக் காவலாளியே !

துன்பம், சாஸ்திரம்,
விழித்திருத்தல், சஞ்சலமடைதல்,
பிணம், தாய விளையாட்டு,
நாளையின் மறுதினத்திற்காக
இவைகளைத்தான் நீ
நேற்றுச் சம்பாதித்தாய்.
இதற்குப் பிறகும் உனக்கு விளங்கவில்லையா ?
உனக்குத் தேசம் இல்லை, வீடு இல்லை.
விரும்புவதற்கும் ஒருத்தி இல்லை.
காதலின் சுற்று யாத்திரையும்
பூர்வீக சங்காரமும் நீளுகின்றது
எனவே உனது சூட்கேஸின் மீது
அழுது கொட்டு,
அதனுடன் சேர்ந்து அழு. . .

{ 1939 இல், இஸ்ரயேலில் பிறந்த சமிஹ் எல் காசிம் (SAMIH EL QASSIM) அங்கே சஞ்சிகைகள், பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தவர். HAIFA இல் வாழும் இவர் இஸ்ரயேலில் உள்ள பாலஸ்தீன எழுத்தாளர் சங்கத் தலைவராவார். இக்கவிதை CENT POEMES SUR LIEXIL (புகலிடம் மீது நூறு கவிதைகள் ) தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.}


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒஸ்லோவில் ஓர்...




அண்மையில் ஒஸ்லோவில் உணவு பரிமாறுதலில் புதியமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உணவுச்சாலையில் பெண்கள் மேலாடைகளின்றி உணவு பரிமாறுபவர்களாக தொழில் புரியத் தொடங்கியுள்ளனர். இந் நடைமுறை பல நவீன உணவுசாலைகளில் நடைமுறையில் இருப்பதாக தெரிய வந்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீவிரமான போராட்டங்களின் மூலம் பல உரிமைகளை வென்றெடுத்து ஸ்கண்டிநேவியாவிலேயேபெண்களுக்கான சுதந்திரம் உரிமைகள் நடைமுறையிலிருக்கும் நாடு என்ற பெருமையை தட்டிக் கொண்ட நோர்வேயில் தற்போது முளைத்தெழுந்துள்ள புதிய பரிமாறும் முறை வேதனைக்குரியதே.

இந்த புதியபாணியிலான உணவு பரிமாறப்படும் உணவுசாலைகளுக்கு வழமையான உடைகளுடன் யாருமே உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் உணவுச்சாலையின் நுழைவாயில் கோட்டும், சூட்டும் இரவலாகப் பெற்றுக் கொள்ளலாம். உள்ளே உணவு கறுப்புநிற netting stocking அணிந்த மேலாடைகள் அணியாத பெண்கள் உணவு பரிமாறுவார்கள்.
இந்த புதிய முறையிலான உணவு பரிமாற்றத்திற்கு மூலைக் மூலை காளான்களாக முளைத்தெழுந்துள்ள உணவுச்சாலைகளிடையேயான போட்டியும், கட்டிடத்திற்கான வாடகையுமே காரணம் என்கிறார் உணவுச்சாலை பொறுப்பாளர். இந்த புதிய முறையயும் லாபம் தரவில்லை எனில் வெளிநாடுகளில் நடைமுறையிலுள்ள சில முறைகளையும் திருட ஆலோசனை இருப்பதாக அவர் மேலும் கூறிப்பிட்டார்.

கட்டிடத்திற்கான வாடகைக்காக toppløs servering இலிருந்து நிர்வாணமான பெண்கள் இது போன்ற எதையும் செய்யத் தயாரக இருக்கிறீர்களா என்ற கேள்விக்கு ஒரு வகையில் ஆம் என்றே கூறலாம் என்றும் உணவுச்சாலை பொறுப்பாளர் பதிலளித்தார்.

toppløs servering இற்கு எதிராக பெண்கள் முன்ணனியின் இயங்கு அணி 92 மிகவும் ஆக்ரோசமாக மக்களை அணிதிரட்டி, சுவரொட்டிகள், கூட்டம் ஊர்வலங்கள் முதலிய நடவடிக்கைகளில் ஈடுபட்டது. வெள்ளிக்கிழமைகள் தோறும் உணவுச்சாலைக்வ முன்னால் சுலோகங்களுடன் கூடி நின்று தமது எதிர்ப்பை தெரிவித்தார்கள். இந்த எதிர்ப்பு நடவடிக்கை சுமார் இரண்டு மாதங்களுக்கு நடைபெற்றது.
அமைதியான முறையில் பெண்களது போராட்டம் தொடர்ந்த போதும் topløss serveringஇனை தடுத்த நிறுத்த எந்த சட்டமும் இல்லை என்பது மிகவும் வேதனைக்குரியதே. பல லட்சங்களுக்கு அதிபதியும், கட்டிடச் சொந்தக்காரருமான Olav Thorn விரும்பினால் மட்டுமே அவர்களை அக்கட்டிடத்தை விட்டு வெளியேற்றலாம் ஆனால் இந்த புதிய உணவு பரிமாறும் முறை ஒன்றும் சட்டத்திற்கு புறம்பானதல்ல அதனால் அவர்களை கட்டிடத்தை விட்டு வெளியேற்றுவது வாடகை சட்டத்திற்கு முரணானது என அவரது செயலாளர் கருத்து தெரிவித்தார்.

topløss servering போன்ற பெண்களின் உடலை விற்பனை பொருளாக்கும் முதலாளித்துவ முகவர்களுக்கு எதிராகப் போராடும் நோர்வேஜிய பெண்களுக்கு நாம் எமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவோம்.

**வாணி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்தி

## கலை இலக்கிய சமூக காலாண்டிதழ்

கலை இலக்கிய சமூக விஞ்ஞானம் சார்ந்த ஆக்கங்களை சக்தி உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறாள்.

ஆக்கங்கள் சிறுகதைகளாகவோ, கட்டுரைகளாகவோ, துணுக்குகளாகவோ, தொடர்கதைகளாகவோ, கவிதைகளாகவோ அமையலாம்.

ஆண்டுச் சந்தா விபரம்

ஸ்கண்டிநேவியா: **NKr 100**

ஏனைய நாடுகள்: **U$ 20**

இலங்கை : இலவசம்.


***SAKTI***
***BOKS 99 OPPSAL***
***0619 OSLO 6***
***NORWAY***

***postgiro no : 0824 03 836 76***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# FOR FULL KVINNEFRIGJØRING



***Nei til salg av kvinnekroppen***
***- stans toppløsserveringa og striptease!***

***Kvinnekamp mot EF!***

***Kvinnekamp er klassekamp!***

அமைப்பும்: Klasse Mot Klasse

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்